வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05
10.01.2024 புதன்கிழமை
இதழ் : 10
பக்கங்கள் : 12




## ஜனாதிபதி சுவிஸ் செல்கிறார்

கொழும்பு, ஜன. 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 13ஆம் திகதி சுவிற்சர்லாந்தில் ஆரம்பமாகவுள்ள 54ஆவது பொருளாதார உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக சுவிற்சர்லாந்து செல்லவுள்ளார்.

எதிர்வரும் 12ஆம் திகதி ஜனாதிபதி சுவிஸ் செல்லவுள்ளார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்களிடம் இருந்து அறிய முடிகிறது.

சுவிற்சர்லாந்தில் நடைபெறும் 11

# தமிழரசு கட்சி மாநாட்டை நிச்சயம் நடத்தவேண்டும்

## இரா. சம்பந்தன் சிறீதரனிடம் தெரிவித்தார்

கொழும்பு, ஜனவரி 10

தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு நிச்சயம் நடத்தப்பட வேண்டும் என்று நேற்றைய தினம் தன்னை சந்தித்த சிறீதரன் எம். பியிடம் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். இதேநேரம், கட்சியின் தலைமை தெரிவு விவகாரத்தில் கட்சியின் பாரம்பரியம் பாதுகாக்கப்படவும் வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். 11



## எம்.பி. பதவியை நேற்று துறந்த சமிந்த விஜயசிறி



கொழும்பு, ஜன. 10

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜயசிறி, எம். பி. பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையொன்றை நிகழ்த்திய அவர், எம். பி. பதவியை 11

## தமிழரசு கட்சியின் செயல்குழு இன்று கொழும்பில் கூடுகிறது

கொழும்பு, ஜன. 10

இலங்கை தமிழரசு கட்சியின் செயல்குழு இன்று புதன்கிழமை கூடுகின்றது. கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த செயல்குழுவில் கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு, தமிழரசு கட்சியின் தலைமை பதவிக்கான தேர்தல், திருகோணமலை கிளையின் நிர்வாக தெரிவில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பிலும் பேசப்படவுள்ளன.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள கூட்டத்தில் 11

## பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் பயணத்தில் அனைவரும் ஒன்றுபடவேண்டும்

கொழும்பு, ஜன. 10

சுதந்திரமான தேசத்தைக் கட்டியெழுப்ப, சேர் பொன். அருணாசலத்தின் இலங்கையர் எனும் எண்ணக்கருவை இலங்கையர்களின் தேவைகள் என்ற வகையில் மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயல்படுகிறேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சேர்.பொன். அருணாசலத்தின் நினைவுதின நூற்றாண்டு நிகழ்விலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, சேர் பொன். அருணாசலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்று அல்லாமல் இலங்கையர் என்ற எண்ணக்கரு தொடர்பாக அதிக நம்பிக்கை கொண்டிருந்ததை நினைவு கூர்ந்தார்.

அந்த கொள்கையை பின்பற்றிய டி.எஸ். 11

## பிரித்தானிய இளவரசி இலங்கை வருகிறார்!

கொழும்பு, ஜன. 10

பிரித்தானிய இளவரசி ஹேன் உத்தியோகபூர்வ பயணமாக ஒன்றை மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 75 ஆண்டு கால நிறைவை முன்னிட்டு இடம்பெறவுள்ள நிகழ்வுகளில் பங்கேற்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்த அழைப்புக்கு அமைய அவரின் வருகை 11

## இலங்கையர்மீது ஜோர்தானில் தாக்குதல்!

அம்மான், ஜன. 10

ஜோர்தானில் சிக்கியுள்ள இலங்கையர்கள் குழு மீது அந்நாட்டு படையினர் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

படையினர் இலங்கையர்களை கொடூரமாக தாக்கியதுடன் கண்ணீர் 11

## தமிழாராய்ச்சி மாநாடு படுகொலையின் 50ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஜன-. 10

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பொது மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் எவ்வித பேதமுமின்றி கலந்துகொண்டு அஞ்சலி செலுத்த வேண்டுமென நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை நான்காவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. 11

## பருத்தித்துறை மருத்துவமனையில் 8 நாட்களில் மட்டும் 93 டெங்கு நோயாளர்

வடமராட்சி, ஜன. 09

கடந்த 8 நாட்களில் மட்டும் 93 டெங்கு நோயாளர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி முதல் நேற்று முன்தினம் 8ஆம் திகதி வரையிலான நாட்களிலேயே இவர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்டவர்களில் 61 நோயாளர்கள் மருத்துவமனையின் விடுதிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் ஏனைய நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் பெரும் நெருக்கடி நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-02)

## வித்தியா கொலை வழக்கு: பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனு ஜனவரி 22 விசாரணை!

கொழும்பு, ஜன. 10

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கடத்தல், கூட்டு வன்புணர்வு மற்றும் கொலை சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் 22 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

இந்த மேன்முறையீட்டு மனுக்கள் ப்ரீத்தி 11

## நாட்டின் சகல பகுதிகளிலும் சாதி பாகுபாடு தொடர்கிறது!

### டிலான் பெரேரா கவலை

கொழும்பு, ஜன. 10

வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் என நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சாதிப் பாகுபாடுகளும் ஒடுக்குமுறைகளும் இன்னமும் தொடர்வதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் 11

## நல்லிணக்க சட்டமூலம் நேற்று நிறைவேறியது!

கொழும்பு, ஜன. 10

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான பணிமனையை அமைக்கும் சட்டமூலம் நேற்று மாலை பாராளுமன்றத்தில் 41 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சட்டமூலத்தின் மீது 11

# இப்படியும் நடக்கிறது

பாராளுமன்றில் நேற்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதவி விலகிய செய்தி பரபரப்பாகப் பேசப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜயசிறி தனது பதவியை இராஜிநாமா செய்திருந்தார். பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜயசிறி, எம்.பி. பதவியை இராஜிநாமா செய்வதற்கு முன்னதாக பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தினார்.

உரையாற்றிய கையோடு தனது பதவி விலகல் கடிதத்தை அவர் சபாநாயகரிடம் கையளித்தார்.

ஓர் எம்.பி. திடீரென்று பதவி விலகியது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமிருக்காது. ஆனால், அவர் 'இந்தப் பாராளுமன்றம் மக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது. அவர்கள் மீது வரிச் சுமையை ஏற்படுத்துவதை தடுக்க முடியாத பாராளுமன்றத்தில் ஓர் உறுப்பினராக இருப்பதைவிட பதவி விலகுவதே சிறந்தது' என்று அவர் அறிவிப்பார் என்றே பலரும் நினைத்திருந்தனர். ஏனெனில், நேற்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பிக்கள் அனைவரும் இந்த வரி அதிகரிப்புக்கு எதிராக கறுப்பு உடையணிந்து வந்திருந்தனர். இப்படி இருக்க அவரோ, 'மக்கள் கோரும் பாராளுமன்றம் அமைய தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி கட்சியுடன் எனக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. ஒரு தந்தை போலவே கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ என்னை வழி நடத்தினார்' என்றார்.

'ஐக்கிய மக்கள் சக்திதான் எனது கட்சி. சஜித்தான் நாட்டை சிறப்பாக நிர்வகிக்கக்கூடியவர். மக்கள் விரும்பினால் மீண்டும் அரசியலுக்கு வருவேன்' எனவும் அவர் கூறினார்.

ஆக, கட்சியில் தலைவருடனோ அல்லது வேறு யாராவது சகாக்களுடனோ அவருக்கு எந்த முரண்பாடும் இல்லை. பாராளுமன்றத் தேர்தலை நடத்த வலியுறுத்தியே அவர் பதவி விலகுகிறார் என்று அறிவித்தார். அவரது கட்சியோ அல்லது அவரது கட்சித் தலைவரோ இந்தப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பாராளுமன்ற தேர்தலை நடத்தவேண்டும் என்று அண்மையில் எங்கும் கோரியதாகவும் தெரியவில்லை. கட்சியும் அதன் தலைவரும் அடுத்து நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்தும் அதற்காகத் தனது கூட்டணிக்கு கட்சிகளை சேர்ப்பதிலும் கவனம் செலுத்திக் கொண்டிருக்க, இவரோ பாராளுமன்ற தேர்தலை நடத்தக்கோரி பதவியை இராஜிநாமா செய்திருக்கிறார்.

என்னவோ அவரது இந்த இராஜிநாமாவில் ஏதோ சிறப்பு இருக்கிறது என்பது மாத்திரம் 'பளிச்'சென்று தெரிந்தது. அதுகுறித்து ஆராய புறப்பட்டபோதுதான் விசயம் வெளிச்சத்துக்கு வந்தது.

இவர் பதவி விலகியமையால் நன்மை பெற்றவர் யார்? கடந்த தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் இவரோடு போட்டியிட்டு இவருக்கு அடுத்த இடத்தில் இருப்பவர்தான் இவரின் பதவி விலகலால் உடனடி நன்மை பெற்றிருப்பார். அவரே இதனால் மகிழ்ச்சியடைந்திருப்பார் என்பதும் நமக்குத் தெரிந்ததுதான்.

இவர் பதவி விலகிய செய்தி வெளிவந்த மறுவிநாடியே அவரின் இடத்துக்கு புதியவர் நியமிக்கப்பட்டுவிட்டார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில், பதுளை மாவட்டத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப் படுத்தி போட்டியிட்டு 31 ஆயிரத்து 307 வாக்குகளைப் பெற்றிருந்த நயன வாசலதிலக என்பவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் யார் என்று அறிய முற்பட்டபோதுதான், அவர் வேறு யாருமல்ல, கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் மனைவியின் சகோதரியின் கணவர் என்ற சமாச்சாரம் தெரியவந்தது.

ஆக, கட்சித் தலைவரின் மனைவியை சந்தோசப்படுத்தவே இவர் தனது பதவியை இராஜிநாமா செய்து 'தியாகம்' செய்திருக்கிறார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவரது மனைவி பல விடயங்களில் 'தலையை' நுழைப்பதாகக் கூறப்படுவதுண்டு. அதனை நிரூபிக்கும் வகையிலேயே, அவரது நெருங்கிய உறவினர்கள் பலர் அப்போது முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் பலர் அந்தப் பதவிகளுக்கு பொருத்தமானவர்களா என்ற விமர்சனம் அந்தக் காலத்தில் வைக்கப்பட்டு வந்தது.

இப்போது அடுத்த தேர்தலில் வெற்றி பெறக்கூடியவர் என்று நம்பப்படுகின்ற சஜித் பிரேமதாஸவின் மனைவிக்காக ஒருவர் பதவி விலகியிருப்பது மகிந்த நடத்திய அரசியல் கலாசாரம் மீண்டும் வருமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

ஏற்கனவே, கட்சி விடயங்களில் அவர் தலையிடுகிறாரென கட்சிக்காரர்கள் மத்தியில் ஒரு புகைச்சல் உண்டு. இந்த நிலையில் இப்படியொரு சம்பவம் நடந்திருப்பது, அதனை ஊர்ஜிதம் செய்வதுபோலவே தெரிகின்றது.!

**- ஊர்க்குருவி.**

# ஐந்தரை இலட்சம் ரூபாவுக்கு மாடுகளை விற்றுவிட்டு திருட்டுப்போனதாக நாடகமாடிய தந்தையும் மகனும்!

கொழும்பு, ஜன. 10

தமக்குச் சொந்தமான இரு மாடுகளை விற்றுவிட்டு திருட்டுப்போனதாக தந்தையும் மகனும் பொலிஸில் பொய்யான முறைப்பாடளித்தனர் என்று அலவத்துகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

அலவத்துகொடை பிரதேசத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் தங்களது இரு மாடுகளையும் வத்தேகம பிரதேசத்திலுள்ள நபரொருவருக்கு பணத்திற்கு விற்றுள்ளனர்.

இதையடுத்து குறித்த இரு மாடுகளும் திருட்டுப் போயின என்று பொலிஸில் பொய் முறைப்பாடு அளித்துள்ளதாக அலவத்துகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட போது முறைப்பாடு செய்த நபரான தந்தையும் அவரது மகனும் இணைந்து இரு மாடுகளையும் வத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஐந்தரை இலட்சம் ரூபாவுக்கு விற்றுள்ளமை தெரியவந்தது.

இதேவேளை, ஏன் பொய் முறைப்பாடு செய்ததாக பொலிஸார் அவர்களிடம் வினவியபோது, தாம் ஆசையாக வளர்த்த மாட்டை எம்மிடம் இருந்து விலைக்கு வாங்கியவர் இறைச்சிக்காக வெட்டியுள்ளார். எனவே பசு மாட்டினையும் வெட்டிவிடுவார்கள் என்ற அச்சத்தில் தாம் பொய் முறைப்பாட்டை வழங்கினோம் என கூறினர்.

இந்நிலையில் பொய் முறைப்பாடளித்த நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மாடுகளை வாங்கிய நபரும் வத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஜெனிற்றாவை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்

## பேர்ள் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜன. 10

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவி சிவானந்தன் ஜெனிற்றாவை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என இலங்கையில் சமத்துவம் மற்றும் நீதிக்கான மக்கள் அமைப்பான பேர்ள் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வவுனியாவுக்கான ஜனாதிபதியின் பயணத்தின்போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சார்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கைகளை முன்வைக்க முயன்றவேளை அவர் கைது செய்யப்பட்டார் என பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

காணாமல்போனவர்களின் உறவுகளும் ஏனைய பல தமிழ் சிவில் சமூக அமைப்புகளும் நிராகரித்துள்ளபோதிலும் இலங்கை அரசாங்கம் உண்மை ஐக்கியம் நல்லிணக்க ஆணைக்குழு குறித்த வர்த்தமானியை வெளியிட்ட அதே வாரத்தில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பேர்ள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைஅரசாங்கம் நல்லிணக்கம் குறித்து கவனம் செலுத்துவதாக தெரிவிக்கின்ற போதிலும் பொலிஸார் தொடர்ந்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை துன்புறுத்துகின்றனர் - அச்சுறுத்துகின்றனர் - அவர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுகின்றனர் எனவும் பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆனால் இதற்கெல்லாம் அஞ்சாமல் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் தொடர்ந்தும் தங்கள் நேசத்திற்குரியவர்கள் எங்கே என கேள்வி எழுப்பி வருகின்றனர் என்றும் பேர்ள் அமைப்பு கூறியுள்ளது. (அ)

# பொலிஸாராக நடித்து கொள்ளை; மூன்று பேர் கைது

கொழும்பு, ஜன. 10

திடீர் சுற்றிவளைப்பு நடத்தும் பொலிஸ் உத்தியோகத்தர்கள்போல் நடித்து, அநுராதபுரத்துக்கு யாத்திரை சென்ற தம்பதியரை பயமுறுத்தி, தம்பதியின் காரை சோதனையிட்டு 41 ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையடித்து தப்பிச் சென்ற மூவரை அநுராதபுரம் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தலாவ மற்றும் சின்னிக்குளம் பகுதியில் வசிக்கும் 21 மற்றும் 30 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநாகலிலிருந்து அநுராதபுரத்துக்கு பாத யாத்திரையாக சென்ற நிலையில் வழியில் மரத்தடியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த தம்பதியரிடமே குறித்த மூவரும் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர். (அ)









மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவ பெருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றபோது...

படங்கள் - ஐ. சிவசாந்தன்

ஈழநாடு
Eelanadu
10.01.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஜனாதிபதி தேர்தலை கையாளுதல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதன் பொது வேட்பாளர் யோசனையை வரவேற்றிருக்கின்றார். கூட்டமைப்பின் பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் ஏற்கனவே இது தொடர்பில் தாம் பரிசீலித்து வருகிறாரெனக் கூறியிருந்த நிலையில் செல்வம் அடைக்கலநாதன் அந்த யோசனையை வரவேற்றிருக்கின்றார். ஏனைய கட்சிகளுடன் இது தொடர்பில் பேசவுள்ளதாகவும் கூறியிருக்கின்றார்.

எனினும், தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் இதுவரையில் தெளிவான நிலைப்பாடுகள் இல்லை. இதேவேளை, வழமைபோல் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றார். 2009இற்கு பின்னர் இடம்பெற்ற மூன்று தேர்தல்களின் போதும் அவர் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்தார். ஆனால், அவரின் கோரிக்கையை மக்கள் கருத்தில் கொள்ளவில்லை.

தேர்தல் பகிஷ்கரிப்பு ஓர் உசிதமான யோசனை அல்ல - ஆனால், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது சிறந்தது - ஆனால், அதற்கு அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் இணைய வேண்டும். அவ்வாறில்லாது போனால் இந்த விடயத்தை முன்னெடுக்க முடியாது. பொது வேட்பாளரை நிறுத்துவதா அல்லது இல்லையா என்பதற்கு அப்பால் - முதலில், ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு கையாள்வது என்பதில் தெளிவான புரிதல் இருக்கவேண்டியது அவசியம்.

அது தொடர்பில் தீர்க்கமான முடிவு ஒன்றுக்கு வரவேண்டும் – அதாவது, வழமைபோல் தென்னிலங்கையின் வேட்பாளர் ஒருவரின் வாக்குறுதிக்கு செவிசாய்த்து அவரை ஆதரிப்பதா அல்லது தமிழ் மக்களின் நலனை கருத்தில்கொண்டு ஜனாதிபதி தேர்தலை ஒரு பேரம் பேசுதலுக்கான துருப்புச்சீட்டாக கையாள்வதா? வழமைபோல்தான் தேர்தலை கையாள்வது என்றால் இது பற்றிய விவாதங்கள் தேவையில்லை. ஆனால், பேரம் பேசுதலுக்கான உத்தியாக கையாள்வது என்றால் இது தொடர்பில் உரையாடப்பட வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல்களின்போது, தென்னிலங்கை வேட்பாளர்கள் எல்லோருமே தமிழ் மக்களுக்கு ஆதரவாகவே பேசுவது உண்டு. இதனை நம்பியே தமிழ் மக்கள் வாக்களிப்பது உண்டு. கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களின்போதும், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் ஆகக்குறைந்தது, தமிழ் மக்களின் நியாயங்களை சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்லக்கூட முயற்சிக்கவில்லை.

இந்த மூன்று தேர்தல்களின்போது, 2015 ஜனாதிபதி தேர்தலின் போது மட்டும்தான் தமிழ் மக்களின் வாக்குகள் வெற்றியில் பங்களித்தது. இந்தத் தேர்தலுக்கு பின்னர் புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவருவதன் ஊடாக தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வை காணப்போவதான நம்பிக்கை ஊட்டப்பட்டது. ஆனால், அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. பொன்சேகாவிடம் எழுத்துமூல உடன்பாடு செய்யப்பட்டதாக சம்பந்தன் பொது மேடைகளில் கூறினார். ஆனால், இன்றுவரையில் அந்த உடன்பாட்டை தமிழ் மக்கள் முன்னால் வைக்கவில்லை.

தீர்மானம் எடுக்கும் இடத்தில் இருக்கும் கட்சிகளின் தலைவர்கள் என்போர் காலத்துக்கு காலம் தீர்மானங்களை எடுப்பதும் - அந்தத் தீர்மானங்கள் தோற்றுப்போனவுடன் அரசாங்கம் ஏமாற்றிவிட்டது என்பதும் கட்சிகளின் தலைவர்களுக்கு சாதாரணமானதாகவே இருக்கின்றது. ஆனால், தலைமைகளை நம்பி வாக்களிக்கும் மக்களுக்கோ தொடர்ந்தும் ஏமாற்றமாகவே இருக்கின்றது. இந்த நிலையை எவ்வாறு மாற்றியமைப்பது - என்னும் கேள்வியிலிருந்துதான் இந்தத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்.

# நல்லிணக்க பணிமனை சட்டமூலத்தை நிறைவேற்ற முன் கலந்துரையாடல் தேவை

## *சிவில் சமூக அமைப்புக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை*

*கொழும்பு, ஜன. 10*

*அரசாங்கம் இவ்வாரம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்து நிறைவேற்ற உத்தேசித்திருக்கும் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலக சட்டமூலம் தொடர்பாக பொதுவெளியில் கலந்துரையாடுவதற்கோ அல்லது அதன் தேவை குறித்து மக்களுக்கு அறிவூட்டுவதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவித்திருக்கும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்கள் அவற்றின் மூன்று முக்கிய அக்கறைகளை வெளிக்காட்டி அறிக்கையொன்றை விடுத்திருக்கின்றன.*

*அந்த அறிக்கையில், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. மாநாட்டின் தலைவர் இஷான் ஏ.ஹமீத், அநுராதபுர மாவட்ட குடிமக்கள் குழுவின் ஒருங்கிணைப்பாளர் நிமால் திஸநாயக்க, ஏசியா லங்கா சமூக அபிவிருத்தி கூட்டுத்தாபன தலைலர் சஷித்த ஹேவகே, போரில் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் தலைவி விசாகா தர்மதாச, சமூகப் பயிற்சிக்கான நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர் ஜோ வில்லியம், மார்கா நிறுவன நிறைவேற்று உப லைவர் அமார் குணதிலக்க, கிழக்கு சமூக அபிவிருத்தி பவுண்டேசன் தலைவர் முஹமட் புஹாரி, சட்ட, சமூக நம்பிக்கை நிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சகுந்தலா கதிர்காமர், தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா உட்பட 19 சிவில் சமூக அமைப்புகளின் தலைவர்கள் கைச்சாத் திட்டுள்ளனர்.*

*அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-*

*அரசாங்கம் இந்த வாரம் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலக சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்து சட்டமாக்கவிருக்கிறது.*

*பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் பரப்பில் சகல குடிமக்களுக்கும் சமத்துவமான வாய்ப்புக்களை உறுதி செய்யும் முகமாக தேசிய ஐக்கியம், நல்லிணக்க அலுவலகம் ஒன்றை நிறுவுவதே இந்த சட்ட மூலத்தின் நோக்கமாகும். இதேவேளை, அடையாளத்தைப் பேணிப் பாதுகாப்பதையும் பல்வகைமையை மதிக்கின்றதும் அமைதியுடனும் ஐக்கியத்துடனும் சகல சமூகங்களும் சகவாழ்வு வாழக்கூடியதுமான சகலரையும் அரவணைக்கும் சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதையும் இந்த அலுவலகம் நோக்கமாகக் கொண்டிருக்கும்.*

*தேசிய ஐக்கியம் மற்றும் சமாதான சகவாழ்வை மேம்படுத்துதல், இலங்கையில் உள்ள சிவில் மற்றும் அரசியல் சமூகங்கள் மத்தியில் உள்ள பல்வகைப்பட்ட பிரதிநிதிகள் மத்தியில் பேச்சுகளை ஊக்குவித்தல் போன்ற மெச்சத்தக்க இலக்குகள் சட்டமூலத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.*

*ஆனால், துரதிர்ஷ்டவசமாக புதிய அலுவலகத்தின் முக்கியத்துவத்தை அரசாங்கமும் அதன் கொள்கை வகுப்பாளர்களும் சட்டவரைஞர்களும் குறைத்து மதிப்பிடுவதாக தெரிகிறது. ஏனென்றால் சட்டமூலம் குறித்து பொதுக் கலந்துரையாடலை நடத்துவதற்கோ அல்லது அலுவலகத்தின் தேவை குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கோ எந்த உருப்படியான முயற்சியும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் மூன்று முக்கிய அக்கறைகள் எமக்கு இருக்கின்றன.*

*முதலாவதாக, தேசிய ஐக்கியம், நல்லிணக்க அலுவலகத்தின் தீர்மானங்களை எடுக்கும் சபையின் உறுப்பினர்களின் ஒழுங்கமைவு அதன் பணிகள் வெற்றிகரமானவையாக அமைவதற்கு முக்கியமானது என்று நாம் நம்புகிறோம். அலுவலகம் எந்த அமைச்சரின் மேற்பார்வையின் கீழ் வருகிறதோ அவரே அந்த சபையின் உறுப்பினர்களை நியமிப்பார்.*

*மூன்று வருட பதவிக் காலத்தை கொண்ட 11 உறுப்பினர்களை நியமிப்பதற்கு சிபாரிசை செய்வதற்கு அமைச்சருக்கு அதிகாரம் இருக்கின்ற அதேவேளை தலைவருக்கு பதவிக்கால மட்டுப்பாடு இல்லை.*

*இது சரியான ஒரு ஏற்பாடு இல்லை. இன,மத குழுக்களினதும் சமூக - கலாசார நலன்களினதும் பல்வகைமையை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியதாக சபையின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் பெருமளவுக்கு பல்தரப்பு வழிமுறையொன்று கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம்.*


*இரண்டாவதாக, சுயாதீனமான நல்லிணக்கப் பொறிமுறைகள் சகலதையும் ஒன்றாகக் கொண்டுவரும் தேசிய நல்லிணக்கச் செயன்முறையில் முதன்மையான பாத்திரமொன்றை மேற்படி அலுவலகம் வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அதன் சபைக்கு நியமிக்கப்படும் உறுப்பினர்கள் மத்தியில் காணாமல்போனோர் விவகார அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவனங்கள் அலுவலகம் மற்றும் விரைவில் நியமிக்கப்படவிருக்கும் உண்மை, ஐக்கியம், நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் பதவிவழி உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று என்று கோருகிறோம்.*

*அவ்வாறு செய்வதன் மூலமாக சகல நல்லிணக்க நிறுவனங்களும் பொதுவான ஒரு நோக்கை பகிர்ந்துகொள்வதையும் அவை ஒவ்வொன்றும் செய்கின்ற பணிகளை பரஸ்பரம் அறிவித்துக் கொள்வதையும் உறுதி செய்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.*

*பாதிக்கப்பட்ட நபர்களினதும் சமூகங்களினதும் கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக சிவில் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யவேண்டிய தேவையும் இருக்கிறது.*

*மூன்றாவதாக, சமூக அடிப்படையிலான அமைப்புகள் உட்பட உள்நாட்டு அமைப்புகளினால் முன்னெடுக்கப்படும் சமாதான மற்றும் நல்லிணக்க செயற்திட்டங்களுக்கு வழிகாட்டி அனுசரணையாக செயற்படுவதற்கு அந்த அலுவலகத்துக்கு அதிகாரம் இருப்பதால் சிவில் சமூகத்துடனான விவகாரங்களைப் பொறுத்தவரை அதற்கு வழங்கப்படும் பாத்திரம் விதிமுறைக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்று நாம் அக்கறை கொண்டுள்ளோம். (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பல வேலைகள் தடைப்பட்டு முடியும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். சலுகைகள் தாமதமாக கிடைக்கும்.

**இடபம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். பொறுப்புகள் தேடி வரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிசயிக்கும் படி நடந்துக்கொள்வீர்கள். நினைத்த காரியம் நிறைவேறும் நாள்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள். கனவு நனவாகும்.

**சிம்மம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயருவீர்.

**கன்னி**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு அதிகரிக்கும். அனுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**துலாம்**
கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. முகப்பொலிவு கூடும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கப்படுவீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணி களை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டும்.

**மகரம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். சாதிக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

# 2009இல் இலங்கை போரில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோது யாரும் கேட்கவில்லை!

## இளைஞர்களிடம் கூறிய அண்ணாமலை



சென்னை, ஜன. 10

இலங்கையில் 2009இல் போர் நடந்தது. அங்கு தமிழர்கள் கொல்லப்பட்டபோது யாரும் கேட்கவில்லை - இவ்வாறு தேவாலயத்துக்குள் தன்னை நுழையக்கூடாது என்று தடுத்த இளைஞர்களிடம் கோபமாகக் கூறியுள்ளார் பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை.

தர்மபுரி மாவட்டத்தில் இரண்டாவது நாளாக ஹஎன் மண், என் மக்கள்' நடைபயணம் மேற்கொண்ட அண்ணாமலை, அங்கு புகழ்பெற்ற புனித லூர்து அன்னை மாதா ஆலயத்துக்குசென்றார். அப்போது அங்கு நின்ற கிறிஸ்தவ இளைஞர்கள் அண்ணாமலையை ஆலயத்துக்கு வரக்கூடாது என்றும், மாதா சிலைக்கு மாலை அணிவிக்க கூடாது என்று தடுத்தனர்.

இதன்போது, மணிப்பூரில் கிறிஸ்தவ மக்கள் கொல்லப்படுவது குறித்தும் கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது, அண்ணாமலைக்கும் இளைஞர்களுக்கும் இடையில் வாதம் ஏற்பட்டது. அப்போது, 'இலங்கையில் 2009இல் போர் நடந்தது. அங்கு தமிழர்கள் கொல்லப்பட்டபோது யாரும் கேட்கவில்லை. சம்பந்தமே இல்லாமல் தி.மு.க.வினர் பேசுவது போல் பேசக்கூடாது. அனைவரும் ஆலயத்துக்கு வர உரிமை உள்ளது. மேலும் ஆலயம் உங்கள் பெயரில் உள்ளதா?' என்று தடுத்து நிறுத்தியவர்களிடம் அண்ணாமலை கேள்வி எழுப்பினார்.

சம்பவம் அறிந்து அங்கு வந்த பொலிஸார் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர். தொடர்ந்து லூர்து மாதாவுக்கு மாலை அணிவித்து அண்ணாமலை வணங்கி சென்றார். (ஐ)

# கட்சிக்குள் கருத்து வேறுபாடுகளின்றி அ. தி. மு. கவினர் செயலாற்ற வேண்டும்!

## பழனிசாமி அறிவுரை



சென்னை, ஜன. 10

அ. தி. மு. க. நிர்வாகிகள் கருத்து வேறுபாடின்றி செயல்பட வேண்டும் என அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவுரை வழங்கி உள்ளார்.

அ. தி. மு. க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடந்தது.

இதன்போது, உரையாற்றிய பழனிசாமி,

நிர்வாகிகளுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளை மாவட்ட செயலாளர்கள் களைய வேண்டும். அனைத்து நிர்வாகிகளையும் ஒருங்கிணைத்து பாராளுமன்ற தேர்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாவட்ட செயலாளர்கள் தங்களுக்குட்பட்ட பாராளுமன்ற தொகுதியில் சிறப்பாக பணியாற்றும் நிர்வாகிகள் பெயர் பட்டியலை தயார் செய்ய வேண்டும். மாற்று கட்சியில் உள்ளவர்களை அ. தி. மு. கவில் இணைக்க கவனம் செலுத்தி மூத்த நிர்வாகிகள் பணியாற்ற வேண்டும். அ. தி. மு. க. நிர்வாகிகள் கருத்து வேறுபாடு இன்றி செயல்பட வேண்டும். கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் சுமுகமாக செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# உலக முதலீட்டாளர் மாநாடு மிகப்பெரிய பாய்ச்சல்!

## முதல்வர் பெருமிதம்



சென்னை, ஜன. 10

"தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிகப்பெரிய பாய்ச்சல்" எனக் குறிப்பிட்டு அமைச்சர், அதிகாரிகள் அனைவருக்கும் முதல்வர் ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு இலட்சம் கோடி அமெரிக்க டொலர் பொருளாதார மாநிலமாக உயர்த்தும் இலக்கை முதல்வர் மு.க. ஸ்டாலின் நிர்ணயித்துள்ளார். இந்த இலக்கை அடையும் வகையில், உலக முதலீட்டாளர் மாநாடு, ஜன.7 மற்றும் 8-ம் திகதிகளில் நடத்தப்பட்டது.

2 நாள் மாநாட்டில் அதிகாரபூர்வ பங்குதாரர் நாடுகளாக சிங்கப்பூர், கொரியா, இங்கிலாந்து, ஜப்பான், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜேர்மனி, டென்மார்க் மற்றும் அமெரிக்கா ஆகிய 9 நாடுகள் பங்கேற்றன. இதேபோல 50 நாடுகளை சேர்ந்த தொழில் பிரதிநிதிகள் மற்றும் முக்கிய தலைவர்கள் வருகை தந்திருந்தனர். ரூ.6.64 லட்சம் கோடி முதலீட்டுக்கான ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இந்நிலையில் நேற்று அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு இந்தியாவே வியக்க வெற்றிகரமாக நடத்திக்காட்டிய தொழில்துறை அமைச்சர் முனைவர் டி. ஆர். பி. ராஜா, அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி!

இரு நாள் மாநாடு - 20 ஆயிரம் தொழில்துறைப் பிரதிநிதிகள் பங்கேற்புடனும், 39 இலட்சம் மாணவர்கள் பார்வையிடவும் பல புதுமைகளோடு தமிழ்ப் பண்பாட்டின் பெருமிதங்களைப் பறைசாற்றி நடந்தேறியுள்ளது.

நமது திராவிட மொடல் அரசு அமைந்த பிறகு இளைஞர்களும் - மகளிரும் உயரும் திட்டங்களையும் செயல்களையும் செயல்படுத்தி வருகிறோம். அதில் மிகப்பெரிய பாய்ச்சல் தான், இந்த தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு - என்றுள்ளது. (ஐ)

# பொலிஸாருக்கு உரியவாறு வழிகாட்டுதல்களை மனித உரிமை ஆணைக்குழு வழங்கவேண்டும்!

## யுக்திய நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்கள் கடிதம்

கொழும்பு, ஜன. 10

**யுக்திய நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் குழுவொன்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டை கோரியுள்ளது.**

நாடாளாவிய ரீதியில்முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களுக்கு எதிரான நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டவர்கள் குழு, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு யுக்திய நடவடிக்கையின்போது இடம்பெறும் சட்டவிரோத ஒழுக்க நெறிக்கு மாறான நடவடிக்கைகளை தடுப்பதற்காக பொலிஸாருக்கு வழிகாட்டுதல்களை வெளியிடவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்ட குழுவினர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

யுக்திய நடவடிக்கை சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கும் சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்புக்கு உட்படுத்துவதற்கும் வழிவகுக்கலாம் என அச்சம் வெளியிட்டுள்ள குழுவினர், இதன் காரணமாக பொது மக்களின் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக இந்த கரிசனைகளுக்கு தீர்வை காண்பதற்காக மனித உரிமை ஆணைக்குழு உடனடியாக தலையிட வேண்டும். அதன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கவேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரசமைப்பின் அடிப்படைக் கொள்கைகளையும் குற்றவியல் சட்டத்தினையும் மீறும் விதத்தில் செயற்படுவது துரதிஷ்டவசமான நிலைமை என தெரிவித்துள்ள யுக்திய நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களின் குழுவினர், இது சட்டத்தின் ஆட்சியை பாரதூரமாக குறைமதிப்பிற்குட்படுத்துகின்றது எனவும் தெரிவித்துள்ளனர். (அ)

# 'யுக்திய' நடவடிக்கையால் உரிமை மீறல் மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை!

கொழும்பு, ஜன. 10

இலங்கை பொலிஸ் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருளை ஒழிக்கும் சோதனையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

ஆணைக்குழு அறிக்கையொன்றை விடுத்து இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளது.

தேடுதல் நடவடிக்கைகளின் போது மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தன்னிச்சையான கைதுகள், மனிதாபிமானமற்ற நடத்தை, தடுப்பு காவல் உள்ளிட்டவை அவற்றில் அடங்குவதாக குறிப்பிடப்படுகின்றது.

இலங்கை அரசியலமைப்பின் 11ஆவது சரத்தின் கீழ் சித்திரவதை, கொடூரமான, மனிதாபிமான மற்ற தண்டனையிலிருந்து விடுபடுவதற்கு இலங்கையில் உள்ள எந்தவொரு பிரஜைக்கும் அடிப்படை உரிமை உண்டு என ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இந்த உரிமை முழுமையானதாகவும் தவிர்க்க முடியாததாகவும் கருதப்படுகிறது.

அத்துடன், பொலிஸ் அதிகாரிகள் சந்தேகத்திற்குரியவர்களை எல்லா சந்தர்ப்பங்களிலும் கண்ணியத்துடன் நடத்துவதன் மூலம் இந்த உரிமையை நிலைநிறுத்த வேண்டும் என எதிர்பார்ப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# கடந்த 24 மணி நேரத்தில் 950 பேர் கைது! 28 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு!!

கொழும்பு, ஜன. 10

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது 950 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியால நேரத்தில் "யுக்திய" விசேட நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் .

இதன்போது 296 கிராம் ஹெரோயின், 194 கிராம் ஐஸ் போதைப்பொருள், 117 கிலோ 421 கிராம் கஞ்சா ஆகியவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்களில் 42 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நால்வரின் சட்டவிரோத சொத்துகள் தொடர்பில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கைதானவர்களில் போதைப்பொருளுக்கு அடிமையான 28 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கொழும்பு மருதானை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது 26 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் நான்கு பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ)

# 'ரின்' இலக்கம் வழங்குவது தொடர்பான செயல்பாடுகளை இலகுபடுத்த பணிப்பு

கொழும்பு, ஜன. 10

பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையின் கீழ் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ரின் இலக்கம் வழங்குவது தொடர்பான செயற்பாடுகளை உடனடியாக இலகுபடுத்தவும் மற்றும் விரிவுபடுத்தவும் துரித நடவடிக்கை எடுக்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி அனைத்து பிரதேச செயலகங்களும் அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதற்கென தனி பிரிவு ஒன்றை திறப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை தயார் செய்யுமாறு பொது நிர்வாக அமைச்சகத்திற்கு பணிப்புரை விடுத்த அமைச்சர், இது தவிர அரசு வங்கிகள், ஆட்கள் பதிவு திணைக்களம், மோட்டார் போக்குவரத்து போன்ற இடங்களில் கவுன்டர்களை திறக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கூறினார்.

ரின் வழங்குவதை வினைத்திறனாக்குவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம், அரச நிர்வாகம் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எரிபொருளைப் பெறுவது தொடர்பான கியூ.ஆர் குறியீடுகளை வழங்குவதில் முன்னர் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று இங்கும் திறமையான செயல்முறை எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, தற்போதைய ஆன்லைன் பதிவு விண்ணப்பப் படிவத்தை சுருக்கி, ரின் இலக்கத்தைப் பெற எடுக்கும் நேரத்தை சுமார் ஐந்து நாட்கள் குறைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. அதன்படி, இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை அரசு நிர்வாகம் மற்றும் உள்ளூர் வருவாய்த்துறை அதிகாரிகள் மேற்கொள்ள உள்ளனர். (அ)

# இளம் நடிகைக்கு பாலியல் தொல்லை கொடுத்த பொலிஸ் பரிசோதகர் கைது!

கொழும்பு, ஜன. 10

சிங்கள நடிகை ஒருவருக்கு பாலியல் தொல்லை செய்ததாக சந்தேகத்தின் பேரில் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான பொலிஸ் பரிசோதகர் 42 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட நடிகை சந்தேகத்திற்குரிய பொலிஸ் பரிசோதகர் ஓட்டிச் சென்ற முச்சக்கரவண்டியில் பயணம் செய்துள்ளார்.

சந்தேகநபர் பிலியந்தலை ஜாலியாகொட பிரதேசத்தில் முச்சக்கரவண்டியை நிறுத்தி நடிகையிடம் தவறாக நடந்துக் கொண்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் குறித்த நடிகை பிலியந்தலை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே சந்தேகத்திற்குரிய பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிலியந்தலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மாடியில் இருந்து குதித்து உயிரை மாய்த்த பெண்!

கொழும்பு, ஜன. 10

வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள அடுக்கு மாடிக் குடியிருப்பொன்றில் இருந்து கீழே குதித்து, பெண்ணொருவர் தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

49 வயதான, ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணின் கணவர் யாழ்ப்பாணம் சென்றுள்ள நிலையிலேயே, வீட்டில் இருந்த கதிரையைப் பயன்படுத்தி 8ஆவது மாடியில் இருந்து குதித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் மனநலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்காகச் சிகிச்சை பெற்று வந்துள்ளார் எனவும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இது குறித்த மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# "ஐ. ம. சக்தியில் உள்ளோரை ஓரம்கட்டாதீர்"

கொழும்பு, ஜன. 10

ஐக்கிய மக்கள் சக்தியில் பிற கட்சிகளை சேர்ந்தவர்கள் தற்போது இணைந்து வரும் நிலையில் கட்சியில் தற்போது இருப்பவர்களை ஓரம் கட்டவேண்டாமென இக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதியவர்களுக்கு இடமளிக்கும் போது 2020 இல் நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய உறுப்பினர்கள் பாதிக்கப்படக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சி மாறி வந்தவர்கள் கட்சியின் ஆதரவாளர்களுடன் இணைந்து பணியாற்றவேண்டும்.

கட்சித் தலைவரைக் காட்டிலும் கட்சியின் சாதாரண உறுப்பினர்களுடன் பழக வேண்டும் என்பதால் இது அவசியம்.- என்றார்.

சிறிலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் உறுப்பினர்களான ஷான் விஜயலால் டி சில்வா மற்றும் தயாஷ்ரித திசேரா ஆகியோர் அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# டெங்கு நோயாளர்கள் தொடர்ந்தும் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 10

நாடளாவிய ரீதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

நாளொன்றில் சுமார் 300 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, டெங்கு நோயை கட்டுப்படுத்தும் வகையில் 70 சுகாதார பிரிவுகளை உள்ளடக்கி எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் விசேட டெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பில், டெங்கு நோயாளர்கள் அதிகம் பதிவாகும் பகுதிகளில் நுளம்புகளை கட்டுப்படுத்துவதற்காக வொல்பெகியா என்ற பக்டீரியாவை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# ஒக்ரோபர் 18ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலுக்கு சாத்தியம்!

### கூறுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜன. 10

**இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் இவ் வருடம் செப்ரெம்பர் 18 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 18 ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 31 (3) சரத்தின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்ரெம்பர் 18 மற்றும் ஒக்ரோபர் 18 ஆம் திகதிக்கு இடையில் நடத்தப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இந்த காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தலுக்கு அழைப்பு விடுக்கும்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு குறையாத மற்றும் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019 நவம்பர் 18, அன்று பதவியேற்றார், ஐந்தாண்டுகளின் பதவிக்காலம் 2024 நவம்பர் 18 இல் முடிவடையும்.

எனவே, ஒரு மாதத்திற்கு குறையாமல் எதிர்வரும் ஒக்டோபர் 18 க்கு முன் மற்றும் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

எமது கணிப்பின்படி தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் மற்றும் வேட்புமனுத் திகதிகளை எதிர்வரும் ஜூலை 17 மற்றும் செப்ரெம்பர் 4ஆம் திகதிக்கு இடையில் எந்த திகதியிலும் அறிவிக்கும்-என்றார். (அ)

# வாகன இறக்குமதி தடை நீக்கம் குறித்து அமைச்சரவையில் விவாதிக்கவில்லை!



கொழும்பு, ஜன. 10

நாட்டில் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு குறித்து அமைச்சரவை கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் சேஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய சூழ்நிலையில், வரி வருமானம் அதிகரிக்கும் என்றும், வாகனங்கள் மீதான இறக்குமதி தடை நீக்கப்படும் என்றும் எங்களால் உறுதியளிக்க முடியாது.

அதிக அந்நியச் செலாவணியைப் பெறுதல், அந்நியச் செலாவணி அதிகரிப்பு மற்றும் பொருளாதாரத்தின் நீண்டகால ஸ்திரத்தன்மை ஆகிய அனைத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் விரைவான தீர்மானங்களை எடுக்க முடியாது. இதுவரை எடுக்கப்பட்ட பல்வேறு கடினமான தீர்மானங்களினால் இலங்கை தற்போது பலமடைந்து வருகிறது-என்றார். (அ)

# சனத்தொகை வீழ்ச்சியை எதிர்கொள்ளும் இலங்கை

### நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 10

இலங்கை எதிர்காலத்தில் கணிசமான சனத்தொகை வீழ்ச்சியை எதிர்கொள்ளும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் மானுடவியல் பேராசிரியர் டபிள்யூ.இந்திரலால் டி சில்வா தெரிவித்தார்.

இந்த விடயத்தில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துவதாகவும், இலங்கையில் பிறப்புகளின் எண்ணிக்கை 25 வீதத்தினால் குறைவடைந்தமை மிக முக்கிய காரணிகளில் ஒன்றாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற குழந்தை பிறப்புகளின் எண்ணிக்கை சுமார் 90,000 வரை குறைவடைந்துள்ளது என பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் பதிவு செய்யப்படும் பிறப்புகள் எண்ணிக்கை இறப்புகள் எண்ணிக்கையை அண்மித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்வதன் காரணமாக இந்த நிலைமை மேலும் மோசமடையவும் சாத்தியம் காணப்படுவதாக பேராசிரியர் டபிள்யூ. இந்திரலால் டி சில்வா கூறினார். (அ)

# புலம்பெயர் தொழிலாளர் பண அனுப்பல் அதிகரிப்பு

### மத்திய வங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 10

புலம்பெயர் தொழிலாளர்கள் மூலமாக கடந்த ஆண்டு மொத்தம் 5,969.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இது கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 57.5 வீத அதிகரிப்பாகும் என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

குறித்த அறிக்கையின் படி 2023 டிசெம்பர் மாதத்தில் மாத்திரம் இலங்கை மொத்தம் 569.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈர்த்துள்ளது.

2002 ஆம் ஆண்டில் புலம்பெயர் தொழிலாளர்கள் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட தொகை 3,789.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தது.இந் நிலையில் அதில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், இலங்கையின் பொருளாதார குறிகாட்டிகள் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கான நேர்மறையான அறிகுறிகளைக் காட்டியுள்ளன.

70 வீதத்துக்கும் அதிகமான பணவீக்க வீதத்தைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக முத்திரை குத்தப்பட்ட இலங்கை, 2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் பணவீக்கத்தை சுமார் 3 வீதமாகக் குறைத்தது.

2024 ஆம் ஆண்டில் பணவீக்கம் 5 வீதத்தை விடவும் குறைந்த வீதத்தில் நிர்வாகிக்கப்படும் என்றும் மத்திய வங்கி எதிர்பார்த்துள்ளது.

இது தவிர, சுற்றுலா பயணிகளின் வருகையும் 2023 ஆம் ஆண்டில் 1.5 மில்லியனைத் தொட்டது மற்றும் அதன் மூலமான வருவாய் 2.068 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

முருகன் அண்ணன்: கணபதி தம்பியா?

# சைவர்களின் மனதை புண்படுத்தும் சதி முயற்சி குறித்து டக்ளஸ் காட்டம்



கொழும்பு, ஜன. 10

சைவர்களின் தெய்வ வரலாறை திரிபுபடுத்தும் வகையில் சிங்களத் திரைப்பட மொன்றில் பிள்ளையார் தம்பியாகவும் முருகன் அண்ணனாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளதாக நேற்று முன் தினம் மாலை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ், 'கதிர திவ்யராஜ' என்ற சிங்களத் திரைப்படத்திலேயே இவ்வாறு திரிபுபடுத்தி திரையிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமட்டுமல்ல, முருகப் பெருமானுக்கு நெற்றிப்பொட்டுக்கு பதிலாக நாமம் இடப்பட்டுள்ளதாகவும், முருகனின் வேலாயுதத்துக்கு பதிலாக சூலம் வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் விளக்கியுள்ளார்.

எனவே, சைவர்களின் வரலாறை திரிபுபடுத்தும் இந்தத் திரைப்படம் தொடர்பான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடுமாறும் நீதிமன்றம் செல்லுமாறும் ஜனாதிபதி ரணில் இங்கு தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பில் அறிக்கையொன்றை தருமாறும் கலாசார அமைச்சரை கேட்டுக் கொண்டார். (அ)

# சம்பளத் திருத்த விவகாரத்தில் ஜனாதிபதி தலையிடவேண்டும்

### இ. போ. ச. ஊழியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 10

சுமார் 5 வருட காலமாக தாமதமாகி வரும் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் சம்பளத்தை அதிகாரபூர்வமாக திருத்தியமைப்பதற்கு உடனடியாக தலையிடுமாறு அகில இலங்கை இ.போ.ச. ஊழியர் சங்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என சங்கத்தின் பொதுச் செயலாளர் சேபால லியனகே தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் இ.போ.ச. ஊழியர்கள், அதிகாரிகளின் சம்பள திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு பல தடவைகள் தெரிவித்தும் எவ்வித பயனும் இல்லை.

சுமார் 5 வருடங்களாக நிலுவையில் உள்ள இந்த தாமதத்தை பொறுத்துக் கொள்ள முடியாது. இப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# ரணிலும் சிறைக்குள் இருக்கவேண்டியவரே!

## தண்டனை நிச்சயம் என்கிறார் அநுரகுமார

கொழும்பு, ஜன. 10

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீதிமன்றில் தண்டனை விதிக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலத்தில் ஆட்சி செய்த பலர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட குற்றவாளிகள் என்ற அடிப்படையில் ஜனாதிபதியும் சிறையில் இருக்கவேண்டியவர் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

எனினும் தமது அரசாங்க ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அவரும் தண்டிக்கப்படுவார்.

நீதிமன்றினால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டவர்கள் சட்டத்தை மிதித்துக் கொண்டு ஆட்சியில் நீடிக்கின்றனர்.

நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமாயின் தேசிய மறுமலர்ச்சியொன்று அவசியம்.



வெறும் ஆட்சி மாற்றத்தின் மூலம் இந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்திவிட முடியாது.

மேலும் நாட்டை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு தலைமை வகிக்க எமது கட்சி தயார்-என்றார். (அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேலும் 100 மில்லியன் டொலர்கள்

## சபையில் கூறினார் ஷெஹான் சேமசிங்ஹ

கொழும்பு, ஜன. 10

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேலும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்ஹ தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டாவறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எமக்கு வழங்கப்படவுள்ளன.

இதுவும் முன்னர் போன்றே, வங்கி அமைப்பு ஊடாக சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கு தனி இலக்கத்துடனான வட்டி வீதத்தில் வழங்க நாம்



தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம்.

அதற்காக இன்னும் சில மாதங்கள் செல்லும்.

மேலும் கடன் உத்தரவாத நிறுவனத்தினையும் ஆரம்பித்து முன்னெடுத்து செல்ல உள்ளோம்.

இதன் முழுமையான நோக்கம் சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளின் நலனுக்காகும்-என்றார். (அ)





# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்விசாரா பணியாளருக்கு மணி விழா

யாழ்ப்பாணம், ஜன. 10

கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் கலாசாலைகளில் நாற்பது வருடங்கள் கற்பித்தல் சாரா பணியாளராக சேவையாற்றிய சீவரத்தினம் தங்கவேலின் பணியோய்வை முன்னிட்டான மணிவிழா நேற்று முன் தினம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசாலையின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் வதனி கேதாரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சுப்ரமணியம் பரமானந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை வழங்கினர். (அ)

# அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்கமுடியாமல் திண்டாடும் மக்கள்!

## நிவாரணம் வழங்க கோருகிறார் ரிஷாத்

கொழும்பு, ஜன. 10

வற் வரி அதிகரிப்பின் பின்னர் அரிசி, சீனி போன்ற அத்தியாவசிய பொருட்களைக்கூட வாங்க முடியாமல் பொதுமக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். எனவே, இவற்றுக்கான நிவாரணத்தை அரசாங்கம் உடனடியாக மக்களுக்கு வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்காலத்தில், நாட்டுக்குத் தேவையான நல்லதொரு தலைமைத்துவத்தையும் சிறந்த ஆட்சி, அதிகாரத்தையும் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, குருநாகல் மாவட்ட கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நாம் கலந்துரையாடி, அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டோம்.

தற்போது விலை கட்டுக்கடங்காமல் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு விவசாயிகள் மிகவும் பாரதூரமான கஷ்டங்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வற் வரியினால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப் பட்டு, அன்றாட வாழ்க்கையைக் கொண்டுசெல்ல முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அரசாங்கம் இந்த விடயத்தில் கவனஞ்செலுத்தி அரிசி, சீனி போன்ற அத்தியாவசிய பொருட்களைக்கூட வாங்க முடியாமல் மக்கள் திண்டாடும் நிலையில் இவற்றுக்கான நிவாரணத்தை அரசாங்கம் உடனடியாக மக்களுக்கு வழங்க வேண்டும் - என்றார். (அ)

# வடமராட்சி கிழக்கில் டெங்கு பரிசோதனை

யாழ்ப்பாணம், ஜன. 10

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நேற்று டெங்கு கட்டுப்பாட்டு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டன.

மருதங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் கட்டைக்காடு பொது சுகாதார பரிசோதகரின் ஒழுங்குபடுத்தலில் முள்ளியான் கிராம சேவையாளர் கி.சுபகுமார் தலைமையில், குறித்த டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை இல்லாதொழித்தது டன் பலருக்கு சிவப்பு எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.

முள்ளியான் கிராம சேவையாளர் பிரிவில் நேற்று ஒருவருக்கு டெங்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையிலையே



நேற்று இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பருத்தித்துறை பிரதேச சபையுடன் இணைந்து பொது இடங்களில் காணப்படும் குப்பைகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை நிறைவேற்று அதிகாரியாக சச்சின் சேமகே!

கொழும்பு, ஜன. 10

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள விசேட வைத்தியர் சச்சின் சேமகே தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

அவர் 2021 ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு மே மாதம் வரையில் அந்த பதவியை வகித்திருந்தார்.

பின்னர், அவர் உலக சுகாதார ஸ்தாபனத்தில் இணைந்திருந்தார்.

இந்தநிலையில், சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன வினால், தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரியாக விசேட வைத்தியர் சச்சின் சேமகே மீண்டும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மட்டக்களப்பில் கனமழையால் தாழ்நில பகுதிகள் வெள்ளத்தில்!

மட்டக்களப்பு, ஜன. 10

**மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் அடைமழை பெய்து வருகின்றது.**

**இதன் காரணமாக தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.**



இதேவேளை வாகரை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கல்லரிப்பு பிரதேசத்தில் வெள்ள நீர் வீடுகளுக்குள் உட் புகுந்ததினால் பாதிக்கப்பட்டவர்கள் இடைத் தங்கல் முகாம் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அரசு மற்றும் நலன் விரும்பிகளினால் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது. சிலர் உயரமான இடங்களில் தங்களது கால் நடைகளை பாதுகாப்பதற்காக தற்காலிக கொட்டில் அமைத்துள்ளனர். போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளமையால் படகுகள் மூலம் தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். நேற்று முன் தினம் காலை 10 மணி முதல் மீண்டும் மாவட்டத்தில் அடை மழை பெய்து வருகிறது.

வயல் நிலங்கள், சிறுதோட்டப் பயிர்கள் என்பன பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கால்நடைகளும் இறந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

மருத்துவ சேவையும், குடிதண்ணீரும் தேவையாகவுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

(அ)



# சின்னம்மை தொற்றை கட்டுப்படுத்தும் தடுப்பூசி வழங்கும் திட்டம் கல்முனையில்

அம்பாறை, ஜன. 10

சிறுவர்களிடையே வேகமாக பரவி வரும் சின்னம்மை (சின்னமுத்து) தொற்றை கட்டுப்படுத்தும் பொருட்டு 6 முதல் 9 மாத வயதுடைய குழந்தைகளுக்கு மேலதிகமான சின்ன முத்து தடுப்பூசி ஒன்றை வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வேலைத்திட்டம் கடந்த சனிக்கிழமை முதல் கல்முனை பிராந்தியத்திலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸடீன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.சீ. எம்.பஸாலின் மேற்பார்வையின் கீழ் இத்தடுப்பூசி வழங்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக 68 தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் இப்பணி முன்னெடுக்கப்பட்டது. இதுவரை மொத்தமாக 1562 பேருக்கு இத்தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தினம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# காணி உறுதிப்பத்திரம் வழங்கல்

மட்டக்களப்பு, ஜன. 10

மண்முனைப்பற்று பிரதேசத்தில் காணி உறுதிப்பத்திரம் அற்றவர்களுக்கான காணி உறுதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.ந.சத்தியானந்தி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு காணி உறுதிப் பத்திரங்களை வழங்கினார்.

இதன்போது முதற்கட்டமாக 19 பயனாளிகளுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூபாலபிள்ளை பிரசாந்தன், மண்முனைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# 21 வயதுக்குள் பட்டம் பெறும்வகையில் கல்வித் திட்டம் மாற்றப்படவேண்டும்!

**பல்கலைக்கழக கூட்டத்தில் எஸ். எம். சபீஸ் வலியுறுத்தல்**

அம்பாறை, ஜன. 10

இன்று உலகம் மாறிவிட்டது அதற்கேற்றால் போல் நாமும் மாறவேண்டும். ஒருகாலம் இருந்தது தலைவர்கள் கட்டளை பிறப்பிப்பவர்களாக இருந்தனர். இன்று தலைவர்கள் நல்லதொரு பயிற்றுவிப்பாளராக உருவாக்கப்பட்டு இருக்கின்றார்கள், அவர்கள் எந்த இடத்தில் யாரை நியமிக்கவேண்டும் என தீர்மானிக்கின்றனர். முன்னர் தனி ஒருவர் தீர்மானங்களை மேற்கொண்டார். இன்று ஒரு குழு இருந்து தீர்மானங்களை மேற்கொள்ளும் முறைக்கு உலகம் மாறிவிட்டது என கிழக்கின் கேடயம் பிரதானியும், அக்கறைப்பற்று மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான எஸ். எம். சபீஸ் தெரிவித்தார்.

உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகத்திற்கும் அம்பாறை மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதானிகள், கல்விமான்களுக்குமிடையிலான சந்திப்பொன்று இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்-

அதனடிப்படையில் மக்களிடமிருந்தும் கருத்துக்களை எடுத்து சட்டங்களை இயற்றுவதற்கு அரசு இப்போதாவது எத்தனித்துள்ளமையினை இட்டு சந்தோசமடைகின்றோம். நமது நாட்டில் காணப்படும் கல்விமுறையில் உடனடி மாற்றங்களை செய்ய வேண்டும். ஒருமாணவன் தனது முதல் பட்டப்படிப்பை 21 வயதுக்குள் நிறைவு செய்து அவன் ஒரு தொழிலை உருவாக்கி 10 பேருக்கு தொழில் வழங்கும் அளவிற்கு கல்வித் திட்டங்கள் மாற்றம் பெறவேண்டும்.

ஆண்டு ஒண்டு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கல்வி கற்றுவிட்டு மீண்டும் அரசாங்கத்தையே ஒரு தொழிலுக்காக காத்திருக்கும் கல்விமுறையை எதற்காக வைத்திருக்கின்றோம். இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் பட்டதாரிகளாக வர வேண்டும். சிறு தேநீர்கடை வைத்திருப்பவர் கூட அக்கடையில் விளம்பரம், களஞ்சியம், கணக்கு, சம்பளம், என எத்தனையோ விடயங்கள் இருக்கின்றது. அவைகளை முறையாக செய்வதற்கு அவர்கள் கல்வி அறிவு படைத்தவர்களாக இருக்க வேண்டும்.

ஆனால் நாம் குறிப்பிட்ட மாணவர்களையே கலாசாலைகளுக்கு தெரிவு செய்கின்றோம். இந்த முறை பிழையானதாகும். அரசாங்கம் தமது வசதிக்கேற்ப மாணவர்களை இணைத்துக் கொள்ளட்டும். ஆனால் தகுதி வாய்ந்த ஏனைய மாணவர்களும் பட்டப்படிப்பினை மேற்கொள்ள தரமான தனியார் பல்கலைக்கழகங்களை அரசு உருவாக்கவேண்டும்-என்றார்.

(அ)

# சம்மாந்துறையில் சிங்கள கற்கைநெறி

காரைதீவு, ஜன. 10

அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற 150 மணித்தியாலங்களைக் கொண்ட சிங்கள கற்கை நெறிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு சம்மாந்துறையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வு சம்மாந்துறை அல்அர்சத் மகாவித்தியாலயத்தில் அதிபர் எம் அப்துல் றஹீம் தலைமையில் நடைபெற்றது.

வலய சிங்கள பாட வளவாளர் நாசிக் அலி இணைப்பாளராக செய்யப்பட்டார்.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா, கௌரவ அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

சிங்கள கற்கை நெறியின் விரிவுரையாளர் ஜெயசிங்க கலந்து கொண்டு இரு மொழிகளிலும் உரையாற்றினார்.

சம்மாந்துறை வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர்கள் என்று 100 பேர் இந்த 150 மணி நேர பயிற்சி நெறியில் கலந்து கொள்கின்றனர்.

(அ)





# வடகாஸாவுக்கு மருத்துவ உதவிகளை நிறுத்தியது உலக சுகாதார நிறுவனம்

## 12 நாட்களாக எவ்வித உதவிகளும் செல்லவில்லை

ஜெனிவா, ஜன. 10

**வடகாஸாவுக்குள் மருத்துவ உதவிகளை அனுப்பவிருந்த உலக சுகாதார நிறுவனம் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரப்படாத காரணத்தால் அதை நிறுத்தியுள்ளது.**

**அந்த மருத்துவ பொருள்கள் அல்அவ்தா மருத்துவமனைக்கும், மற்றொரு மருந்தகத்திற்கும் கொண்டு செல்ல இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.**



வடகாஸாவுக்குள் மருத்துவ உதவிகளைக் கொண்டு செல்ல முடியாமல் போவது இது நான்காவது முறையாகும். வடகாஸாவுக்கு உதவிகள் சென்று 12 நாள்கள் ஆகிறது.

கடுமையான வெடிகுண்டுத் தாக்குதல்கள், நடமாட்டக் கட்டுப்பாடு ஆகியவற்றுடன் தெளிவான தகவல்கள் இல்லாத காரணத்தால் ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி இந்த முடிவை எடுத்ததாக உலக சுகாதார நிறுவனம் சமூக ஊடகம் வழி தகவல் வெளியிட்டது.

5 மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவப் பொருள்களை ஜனவரி 7ஆம் திகதி அனுப்ப திட்டமிடப்பட்டதாக நிறுவனம் தெரிவித்தது.

சரியான நேரத்திற்கு மருத்துவ உதவிகள் கிடைக்காவிட்டால் வடகாஸாவில் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். காஸா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால் செய்வது அறியாது பொதுமக்கள் கலங்கி நிற்கின்றனர். (அ)

# நாய் இறைச்சி வியாபாரம் தடை!

## தென்கொரியாவில் வருகிறது புதிய சட்டம்



சியோல், ஜன. 10

எதிர்வரும் 2027 ஆம் ஆண்டுக்குள் நாய்களை இறைச்சிக்காக கொன்று விற்பனை செய்வதை தடுக்கும் புதிய சட்டமூலம் தென்கொரியாவில் கொண்டு வரப்படவுள்ளது.

பல நூற்றாண்டுகலாக தென்கொரியாவில் நாய் இறைச்சிகளை உண்ணும் பழக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பதே இந்த புதிய சட்டமூலத்தின் நோக்கமாகும்.

புதிய சட்டத்தின் கீழ் நாய்களை இறைச்சிக்கா வளர்ப்பது, கொலை செய்வது, நாய் இறைச்சியை விநியோகிப்பது அல்லது விற்பனை செய்வது போன்றவற்றுக்கு தடை விதிக்கப்படும்.

சட்டத்தை மீறி செயற்படுவது தண்டனைக்குரிய குற்றம் என்பதுடன், இந்த குற்றத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் சிறைக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் தென்கொரியா தெரிவித்துள்ளது.

இந்த புதிய சட்டம் இன்னும் மூன்று ஆண்டுகளில் நடைமுறைக்கு வரும், இது விவசாயிகளுக்கும் உணவக உரிமையாளர்களுக்கும் வேலை வாய்ப்பு மற்றும் வருமானத்திற்கான மாற்று ஆதாரங்களைக் கண்டறிய அவகாசம் அளிக்கிறது.

நாய் இறைச்சி பண்ணையாளர்கள், இறைச்சிக் கடைக்காரர்கள் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு முழு ஆதரவளிப்பதாக அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

தென் கொரியாவில் 2023 இல் சுமார் 1,600 நாய் இறைச்சி உணவகங்களும் 1,150 நாய் பண்ணைகளும் இருந்ததாக அந்நாட்டு அரசாங்க புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)




# அதிகரித்து வரும் யூத எதிர்ப்பு!

## ஆஸியில் நாஜி சின்னங்களுக்கு தடை

கான்பரா, ஜன. 10

அவுஸ்திரேலியாவில் நாஜி வணக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சின்னங்களை காட்சிப் படுத்துதல் என்பன தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது.

காசாவில் ஹமாஸுக்கு எதிரான இஸ்ரேலின் போருக்கு மத்தியில் இந்த உத்தரவு வந்துள்ளது.

அண்மைய மாதங்களில் குறிப்பாக காசா மீது இஸ்ரேலின் குண்டுவீச்சுக்கு மத்தியில், வெறுப்பு மற்றும் யூத-விரோத சம்பவங்களின் அதிகரிப்புக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் பதிலளிப்பதால், நாஜி வணக்கம் செலுத்துவதையும் அதனுடன் தொடர்புடைய சின்னங்களை காட்சிப்படுத்துவது அல்லது விற்பனை செய்வதையும் தடை செய்யும் சட்டம் திங்கள் முதல் அமுலுக்கு வந்துள்ளது.

"நாஜி வணக்கத்தை பொதுவில் செய்வது அல்லது நாஜி சின்னங்களை பகிரங்கமாக காட்சிப்படுத்துவது அல்லது வர்த்தகம் செய்வது இப்போது சட்டவிரோதமானது" என்று அவுஸ்திரேலிய சட்டமா அதிபர் மார்க் ட்ரேஃபஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பயங்கரவாத செயல்களுக்கு வசைபாடுவது குற்றவியல் குற்றம் என்பதையும் புதிய சட்டங்கள் உறுதி செய்கின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த டிசெம்பர் 06 ஆம் திகதி அவுஸ்திரேலிய பாராளுமன்றில் ஒரு மனதாக குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

இது தடைசெய்யப்பட்ட நாஜி சின்னங்களை காட்சிப்படுத்துவது அல்லது நாஜி வணக்கம் செலுத்துவது என்பன 12 மாதங்கள் வரை சிறைத்தண்டனையுடன் கூடிய குற்றவியல் குற்றமாகும் என்பதை கோடிட்டுக் காட்டுகின்றது.

2023 ஒக்ரோபர் 7 ஆம் திகதி காசாவில் ஹமாஸுக்கு எதிரான இஸ்ரேலின் போர் தொடங்கியதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவில் யூத எதிர்ப்பு அதிகரித்து வரும் நிகழ்வுகளுக்கு மத்தியில் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜப்பானில் ஒரு வாரத்தில் மட்டும் 1,200இற்கும் மேற்பட்ட நில அதிர்வு

ரோக்கியோ, ஜன. 10

ஜப்பானில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 1,214 நிலநடுக்கங்கள் பதிவாகி உள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் இஷிகாவா மாகாணம் மற்றும் மேற்கு கடற்கரை பகுதியில் கடந்த முதலாம் திகதியன்று அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களில் சுனாமி அலைகள் கடற்கரையை தாக்கின.

இந்நிலையில் குறித்த நிலநடுக்கத்தில் 168 உயிரிழந்ததுடன், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 323ஆக அதிகரித்துள்ளன.

சக்திவாய்ந்த நிலநடுக்கத்துக்கு பின்னர் வலுவான பல நிலநடுக்கங்கள் ஏற்படும் என ஜப்பான் வானிலை ஆய்வு மையம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தது.



அதன்படி கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 1,214 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. மேலும் பல நிலநடுக்கங்கள் ஏற்பட வாய்ப்புகள் காணப்படுவதால் மக்கள் அச்சத்தில் இருப்பதாக உள்ளூர் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் ஜப்பானில் மீட்பு பணிகளுக்கு இடையூறாக கடும் பனி பொழிந்து வருவதால், மீட்பு பணிகள் தாமதமடைவதாகவும், சில இடங்களில் மழை பெய்து வருவதால் நிலநடுக்கம் ஏற்பட்ட இடங்களில் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# சுற்றுலா சென்ற 25 பேர் மரணம்!

## பிரேஸிலில் சோகம்!!

பிரேசிலியா, ஜன. 10

பிரேசிலில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்தொன்று கனரக வாகனமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேசிலின் பிரேசிலின் வடகிழக்கு மாநிலமான பாஹியாவில் உள்ள காவியாவோ பகுதியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



குறித்த பேருந்தில் 30 க்கும் மேற்பட்டோர் பயணித்துள்ள நிலையில், அதில் 25 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 6 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பங்கமில்லா வாழ்வு பெற பொங்கலை மண் பானையில் கொண்டாடுவோம்!

## ஐங்கரநேசன் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

**தமிழ் மக்களின் தேசியத் திருநாட்களில் ஒன்றாகக் கொண்டாடப்படும் தைப்பொங்கல் இயற்கையைப் போற்றுகின்ற ஒரு பண்பாட்டுப் பெருவிழாவாகும். தொன்றுதொட்டு இவ்விழாவில் இயற்கைக்கு இசைவான மண்பானைகளிலேயே பொங்கல் இடம்பெற்று வந்துள்ளது. ஆனால், மண்பானைகளின் இடத்தை இப்போது அலுமினியப் பானைகள் ஆக்கிரமித்து வருகின்றன. அலுமினியப் பானைகள் இயற்கையைப் போற்றுகின்ற ஒரு விழாவுக்குப் பொருத்தமற்றது என்பதோடு, உடல் நலத்துக்குக் கேடானதாகவும் உள்ளன. தமிழர் பண்பாடும் உடல் நலமும் பங்கமில்லாத வாழ்வுபெறப் பொங்கலை மண்பானையில் கொண்டாடுவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் அழைப்பு விடுத்துள்ளார்.**



தைப்பொங்கலில் மண்பானைகளின் முக்கியத்துவம்பற்றி பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு அழைப்பை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அலுமினியம் மிகவும் இலேசானது. உலோகம் ஆகையால் இலகுவில் வெப்பத்தைக் கடத்த வல்லது. இதனால், சமையலை விரைந்து முடிக்க வல்லது. நெளிந்து வளைந்தாலும் உடைந்துவிடாது, ஒப்பீட்டளவில் விலை மலிவானது. இவை போன்ற காரணங்களால் சமையல் அறைகளில் பிரதான பாத்திரங்களாக அலுமினியப் பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. அலுமினியப் பாத்திரங்களில் உணவு சமைக்கும்போது அலுமினியம் உணவுடன் சேர்வதைத் தவிர்க்கும் பொருட்டுப் பாத்திரத்தின் உட்பகுதியில் அலுமினியம் ஒட்சைட்டுப் படலம் இடப்படுகிறது.

அலுமினியப் பாத்திரங்களைத் தேய்த்துச் சுத்தம் செய்யும்போது பாதுகாப்புப்படலம் தேய்வடைந்து உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விடுகிறது. மேலும், சமைக்கப்படும் உணவுப் பொருளின் அமிலகார இயல்பு, சேர்க்கப்படும் உப்பு சமையல் வெப்பநிலை ஆகியனவற்றைப் பொறுத்து அலுமினியம் கரைந்து உணவுடன் கலப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. உடலுடன் சேரும் அலுமினியம் மூளை நரம்புகளைப் பாதிப்பதுடன் ஏற்கனவே சிறுநீரக நோயுடையவர்களின் சிறுநீரகங்களை மேலும் பாதிப்படையவும் செய்கிறது என மருத்துவ ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

மட்பாத்திரங்கள் அவற்றின் மேற்பரப்பில் இயற்கையாகவே உள்ள நுண்துளைகள் ஊடாக வெப்பத்தைப் பரவி உணவைச் சீராக வேகவைக்கிறது. மெதுவாகவே சூடுபடுத்துவதால் உணவில் போசணைப்பொருட்களின் அழிவு தவிர்க்கப்படுகிறது. மண் கார இயல்பு கொண்டதால் உணவில் அமிலத் தன்மையை சமன் செய்கிறது. சமைக்கும்போது மண்ணிலிருந்து கனியுப்புகள் உணவிற்கு விடுவிக்கப்படுவதால் உணவு கூடுதல் போசணைப் பெறுமானம் பெறுகிறது. மேலும் உணவின் வாசனையுடன் மண்ணின் வாசனையும் சேர்ந்து உணவுக்குக் கூடுதல் சுவையையும் தருகிறது.

எதனையுமே அவசரகதியில் செய்துவிடத் துடிக்கும் நாம் உடல் ஆரோக்கியத்தைப் பேண வேண்டிய சமையலையும் அவ்வாறே விரைந்து முடிக்கத் தலைப்பட்டு உலோகப் பாத்திரங்களை நாடியுள்ளோம். இதன் விளைவாக நோயின் வாய்ப்பட்டும் வருகிறோம். மட்பாண்டங்களுக்கு முழுமையாகத் திரும்புதல் இயலாததாக இருக்கலாம். எனினும் தமிழ் மக்களின் இயற்கையைப் போற்றும் தைப்பொங்கல் திருநாளிலாவது மண்பானைகளில் பொங்கல் இடுவோம். இது நலிவடைந்துள்ள மட்பாண்டக் கைவினைஞர்களது வாழ்வு வளம்பெறவும் உதவும்-என்றார். (அ-02)

# மின் கட்டண யோசனை இன்னும் கிடைக்கவில்லை

கொழும்பு, ஜன. 10

மின் கட்டண திருத்தம் தொடர்பில் யோசனையொன்று தமது ஆணைக்குழுவிடம் முன் வைக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் அறிக்கை பொய்யானது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறான யோசனையொன்று இலங்கை மின்சாரசபையினால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக ஒருசில ஊடகங்கள் செய்தி வெளியிடப்பட்டிருந்தாலும் இதுவரையில் அவ்வாறான யோசனையும் தமது ஆணைக்குழுவுக்கு கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் பூசகர் கைது!

கொழும்பு, ஜன. 10

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில், ஹொரண பகுதியைச் சேர்ந்த பூசகர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பூசகர் சுனாமிவத்த பிரதேசத்திலுள்ள ஆலயமொன்றில் பணியாற்றி வந்த நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் பொதிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சீனத் தம்பதி கைது !

கொழும்பு, ஜன. 10

50 மில்லியன் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களுடன் சீனத் தம்பதியினர் கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமான முறையில் இரத்தினக் கற்களுடன் நாட்டை விட்டு வெளியேற முயற்சித்த சீன தம்பதியை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட தம்பதியிடம் இருந்து 175 இரத்தினக் கற்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

குறித்த தம்பதியை மேலதிக விசாரணைக்காக இலங்கை சுங்கத்திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் பெரும் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 10

வற் வரி அதிகரிப்பின் காரணமாக பல அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளன.

இதன்படி பருப்பு, உருளைக் கிழங்கு, சீனி, வெங்காயம், கோதுமை மா உள்ளிட்ட சில பொருட்களின் விலை மேலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வற் வரி அதிகரிப்புக்கு முன்னர் 300 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் பருப்பின் விலை 350 ரூபா வரையில் அதிகரித்துள்ளது.

சில பகுதிகளில் 290 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த சீனி 320 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

வர்த்தகர்கள் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். (அ)

# கொழும்பு துறைமுகத்தில் இந்திய கடற்படை கப்பல்

கொழும்பு, ஜன. 10

இந்திய கடற்படை கப்பலான ஐ.என்.எஸ் கப்ரா கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

50 மீற்றர் நீளமுடைய இந்த கப்பலில் 55 பணிக்குழாமினரும் இலங்கை வந்துள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐ.என்.எஸ் கப்ரா இன்று வரை கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கப்பம் பெற்றவர் கைது!

கொழும்பு, ஜன. 10

மினுவாங்கொடை போத்தல பிரதேசத்தில் தன்னைப் பாதாள உலக நபராகக் காட்டி 15 இலட்சம் ரூபா கப்பம் கோரி, அதில் 5 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்ட நபரை கொலை மற்றும் ஒழுங்கமைக் கப்பட்ட குற்றப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மினுவாங்கொடை போத்தலை பிரதேசத்தைச் சேர்ந்த எழுபது வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தன்னை ஹீனெட்டிய போத்தல என அறிமுகப்படுத்தி தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு, 15 இலட்சம் ரூபா கப்பம் கோரியதாக மினுவாங்கொடை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்து சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். (அ)

# லசந்த விக்கிரமதுங்க படுகொலை; பாரபட்சமற்ற விசாரணை தேவை!

## வலியுறுத்துகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜன. 10

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணையை நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க, படுகொலை செய்யப்பட்டு நேற்று முன்தினம் 15 வருடங்கள் கடந்துள்ள நிலையிலேயே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

15 வருடங்களுக்கு முன்னர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவிற்கு நீதி வழங்குவோம் என கடந்த தேர்தல்களின் போது அரசியல்வாதிகள் பலர் வாக்குறுதியளித்திருந்த போதிலும் யாரும் அதனை நிறைவேற்றவில்லை.



லசந்த தனது வாழ்நாளில், மக்களுக்கு உண்மையையும், சமூக அநீதிகளையும், நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த அஞ்சாதும் செயற்பட்டவர் ஆவார். இதன் விளைவாக அவர் தனது உயிரை தியாகம் செய்ய நேரிட்டது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, ஜனாதிபதியாக்கும் பயணத்தில் பல்வேறு விதமான பங்களிப்புகளை வழங்கியவர் லசந்த விக்கிரமதுங்க. எனவே லசந்தவின் கொலையாளிகள் யார் என்பது தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணையை நடத்துமாறு ஜனாதிபதியிடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துங்கள். நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுங்கள்-என்றார். (அ)

## தமிழாராய்ச்சி...

மாநாட்டின் இறுதிநாளான 10ஆம் திகதி பொலிஸார் குழப்பத்தை ஏற்படுத்தினர். இதன்போது, அவர்கள் மின்கம்பிகளை சுட்டனர். மின்கம்பிகள் மக்கள் கூட்டத்தின் மீது விழுந்ததில் மின்சாரம் தாக்கி 9 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எம். பி. பதவியை...

துறப்பதாக அறிவித்தார்.

பதவி விலகல் கடிதம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

“மக்கள் கோரும் பாராளுமன்றம் அமைய தேர்தல் நடத்தப்பட வேண்டும். கட்சியுடன் எனக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. ஒரு தந்தைபோலவே கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ என்னை வழிநடத்தினார்.” -என்றார்.

ஐக்கிய மக்கள் சக்திதான் எனது கட்சி. சஜித்தான் நாட்டை சிறப்பாக நிர்வகிக்கக்கூடியவர். மக்கள் விரும்பினால் மீண்டும் அரசியலுக்கு வருவேன் எனவும் அவர் கூறினார். (அ)

## நல்லிணக்க...

வாக்கெடுப்பு கோரியதன் பிரகாரம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்படி, சட்டமூலத்திற்கு ஆதரவாக 48 எம்.பிக்களும் எதிராக 7 எம்.பிக்களும் வாக்களித்தனர். விவாதத்தில் திருத்தங்கள் சேர்க்கப்பட்டு, திருத்தங்களுடன் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, தேசிய நீர்வரையியல் சட்டமூலமும் வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. (அ)

## பிரித்தானிய...

அமையவுள்ளது.

இந்த வருகையின்போது பிரித்தானிய இளவரசியின் கணவர், வைஸ் அட்மிரல் சேர் டிம் லோரன்ஸும் இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 13ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருக்கும் அவர்கள் கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கு செல்லவுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## தமிழரசு...

இலங்கை தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் நேற்றைய தினம் பாராளுமன்றத்துக்கு வருகை தந்தார். அந்தச் சமயம், தமிழரசு கட்சியின் தலைமை பதவிக்கு போட்டியிடுபவர்களில் ஒருவரான சி. சிறீதரன் எம். பி. அவரை மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டை - கட்சி தலைமைக்கான தேர்தலை நடத்தவிடாது தடுக்கும் நோக்கில் திருகோணமலை கிளையின் நிர்வாகக் குழு தெரிவு விவகாரத்தை கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் கையாள்கிறார் என்று குற்றச்சாட்டுகள் வெளியாகியிருந்தன. இந்தநிலையில், இரா. சம்பந்தன் தேசிய மாநாட்டை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பது மிக முக்கியமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

இதேபோன்று, தலைமைப் பதவிக்கான போட்டி தொடர்பில் கட்சியின் பாரம்பரியத்தை பாதுகாக்குமாறும் சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். 73 வருட வரலாற்றை கொண்ட தமிழரசு கட்சியின் பாரம்பரியத்தில் தேர்தல் மூலம் தலைவர் தெரிவு இடம்பெறவில்லை. கட்சியின் மூத்த தலைவர்கள் கட்சியின் தலைவரை தெரிவு செய்வதே வழக்கமாகும் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## இலங்கையர்மீது...

புகைக் குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்தானில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் சுமார் 350 இலங்கையர்கள் சம்பளம் வழங்கப்படாமையால் மோசமான நிலைமைகளை எதிர்கொண்டுள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகின.

குறித்த ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் தமக்கு அதிகாரிகள் உரிய சம்பளத்தை வழங்குவதில்லை எனவும், இலங்கைக்கு மீள வருவதற்கு இடமளிப்பதில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையிலேயே, ஜோர்தானில் சிக்கியுள்ள இலங்கையர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், அவர்கள் மீது அந்நாட்டு படையினர் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது குறித்து பாதிக்கப்பட்டவர்கள் கருத்து வெளியிடுகையில்,

எமது பிரச்னையை முழு நாடும் அறிந்துள்ளது. தூதரகத்திற்கும் எல்லா விடயங்களும் தெரியும், சுமார் ஒரு மாதத்திற்கும் மேலாக தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது. நாங்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம்.

சாப்பாடு உள்ளிட்டவைகள் சரியாக கிடைக்காமல் தவிக்கின்றோம். இந்நிலையில், எங்களுக்கு மிக விரைவில் தீர்வு ஒன்றை பெற்றுத்தர வேண்டும்” என கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## நாட்டின்...

இதேவேளை இனவாதம் மற்றும் மதவாதம் பற்றியே நாம் பேசுகிறோம். ஆனால், கண்ணுக்குத் தெரியாத ஒரு பிரச்னையாக இது உள்ளதுடன் இன, மதப் பிரச்னைகளுக்கு அப்பால் சாதிய ரீதியாக மக்கள் ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அரசியலிலும் இந்தப் பிரச்னை காணப்பட்டது. ஆனால், இந்த சாதிய முறையை உடைத்தெறிந்து அதனை சவாலுக்கு உட்படுத்திய ஒரே தலைவராக ரணசிங்க பிரேமதாஸ காணப்படுகிறார்.

ஆனால், வேறு எந்தவொரு தலைவராலும் இதனை செய்ய முடியாது போனது. ஆகவே, நல்லிணக்க அலுவலகத்தின் ஊடாக காலங் காலமாக தொடரும் இந்தப் பிரச்னைக்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுப்பதும் அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## தமிழரசு...

தமிழரசு கட்சியின் தலைமைப் பதவிக்கான தேர்தல் தொடர்பில் கடும் வாதப் பிரதிவாதங்கள் நிகழக்கூடும் என்று செயல்குழுவின் உறுப்பினர் ஒருவர் ஈழநாடு நாளிதழுக்கு தெரிவித்தார்.

இதேநேரம், இன்றைய கூட்டத்தில் தமிழரசு கட்சியின் தலைமை பதவிக்கு போட்டியிடுபவர்களில் ஒருவரான ம. ஆ. சுமந்திரன் எம். பி. பங்கேற்பாரா என்பது தெரியவரவில்லை. வெளிநாடு சென்றுள்ள சுமந்திரன் நேற்றுப் பகல்வரை நாடு திரும்பியிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதி...

உச்சிமாநாட்டைத் தொடர்ந்து, பிளவுபடாத நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள ஜனாதிபதி உகாண்டா செல்லவுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி பிளவுபடாத நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு உண்டாவில் ஆரம்பமாக உள்ளதுடன், 20ஆம் திகதிவரை இந்த மாநாடு நடைபெற உள்ளது.

இந்த விஜயத்தில் ஜனாதிபதி விக்ரமசிங்கவுடன் பல அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர். (அ)

# நல்லிணக்க பணிமனை சட்டத்தின் மூலம் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த நேரிடும்

## சரத் வீரசேகர பாராளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 10

தேசிய ஒற்றுமையை, நல்லிணக்கத்தை ஸ்தாபிக்க அரசாங்கம் ஏற்றுக்கொண்ட விடயங்களை செயல்படுத்த வேண்டும் என சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலுவலகத்தை ஸ்தாபித்ததன் பின்னர் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டால் அதனையும் செய்ய வேண்டும். ஆகவே, நாட்டின் ஒற்றையாட்சிக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கம் செலுத்தும் எதற்கும் ஆதரவு வழங்க முடியாது. இந்த சட்டமூலத்துக்கு நான் எதிர்ப்பு தெரிவிப்பேன் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டார்.

உண்மையை கண்டறியும் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படவுள்ளது. இந்த ஆணைக்குழு ஊடாக இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியம் திரட்ட முடியும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவ அதிகாரிகள் இன்று தண்டிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு சர்வதேச மட்டத்தில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்கு பாராளுமன்றத்தின் ஊடாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான சட்டமூலத்தில் தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பதற்கு உருவாக்கப்பட்ட அரச கொள்கைகளை செயல்படுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டால் இந்த அலுவலகத்தின் ஊடாக அதனையும் செயற்படுத்த வேண்டும். 29 ஆயிரம் இராணுவத்தினர் இதற்காகவே உயிர் நீத்தார்கள்.

தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தை ஸ்தாபிக்கும் சட்டமூலம் சூழ்ச்சி நிறைந்தது. எதிர்காலத்தில் இராணுவத்தினருக்கு மறைமுகமாக பாதிப்பை ஏற்படுத்தும் ஆகவே இந்த சட்டமூலத்துக்கு நான் எதிர்ப்பு தெரிவிப்பேன் -என்றார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகம், தேசிய நீரளவை சட்டமூலம் என்பன மீதான விவாதத்தின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஐ)

# “பொருளாதார நெருக்கடி காரணமாக 22வீத குடும்பங்கள் கடனாளிகளாகின”

கொழும்பு, ஜன. 10

பொருளாதாரப் பாதிப்பால் பெருந்தோட்டப் பகுதியில் 42.8வீதமான குடும்பங்கள் கடனாளியாகியுள்ள நிலையில் மொத்த சனத்தொகையில் 91வீதமானோரின் மாத செலவுகள் சடுதியாக உயர்வடைந்துள்ளது. தொழிலின்மை வீதம் 14.2 சதவீதமாக உயர்வடைந்துள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது பொருளாதார பாதிப்புக்களினால் சமூக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நாட்டின் மொத்த சனத்தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட 62 இலட்சம் குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு விசேட நலன்புரி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 60.5 சதவீதமான குடும்பங்கள் மாத வருமானத்தை இழந்துள்ள நிலையில் 91 சதவீதமானோரின் மாத செலவுகள் சடுதியாக உயர்வடைந்துள்ளன.

பொருளாதார பாதிப்பால் மொத்த சனத்தொகையில் 22 சதவீதமானோர் கடனாளியாகியுள்ள நிலையில் அதில் நகர் புறத்தை சேர்ந்த 24.3 சதவீதமான குடும்பங்களும், கிராம புறத்தில் 20 சதவீதமான குடும்பங்களும் பெருந்தோட்டப் பகுதியில் 42.8 சதவீதமான குடும்பங்களும் கடனாளியாகியுள்ளனர்.

அத்துடன் குறுகிய காலத்துக்குள் தொழிலின்மை 14.2 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறையினர் பாதிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கிறோம்.

தேசிய மட்டத்திலான தொழில்துறையை மேம்படுத்த மூலப் பொருள் அல்லாத உற்பத்திகளின் இறக்குமதிகளை மட்டுப்படுத்த நிதியமைச்சு தீர்மானித்துள்ளது. வணிக கடன் பெற்ற வாடிக்கையாளர்கள் தொடர்பில் மிதமான கொள்கையை கடைப்பிடிக்குமாறு அரச வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது- என்றார். (ஐ)

## பிரதிவாதிகள்...

பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பான சிங்கள மொழி பெயர்ப்பு பிரதிகளை சட்டமா அதிபரிடம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து, மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் என்று நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது.

2015 இல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய, யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிவலோகநாதன் வித்தியா என்ற 18 வயது பாடசாலை மாணவியை கடத்தி, கூட்டு வன்புணர்வு செய்து கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் சுவிஸ் குமார் மற்றும் 07 பிரதிவாதிகளுக்கு 2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழு மரண தண்டனை விதித்தது.

தங்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ள விதம் சட்டத்திற்கு முரணானது என பிரதிவாதிகள் கூறுகின்றனர்.

இதன்படி, குற்றச்சாட்டில் இருந்து தம்மை விடுவிக்குமாறு கோரி பிரதிவாதிகள் உயர் நீதிமன்றில் இந்த மேன்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பொருளாதார...

சேனநாயக்க அனைத்து இனத்தவரையும் மதத்தவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையர்களின் தேவைகள் என்ற வேலைத்திட்டத்தைப் பலப்படுத்தும் வகையில் யுத்தம் சார்ந்த பிரச்னைகள் அனைத்துக்கும் 2025 இற்குள் தீர்வு காண எதிர்பார்ப்பதாக ரணில் தெரிவித்தார்.

மேலும் சரிவடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் பயணத்தை ஆரம்பித்திருக்கும் தேசம் என்ற வகையில், அனைவரும் ஒன்றுபடுவதே சேர்.பொன். அருணாச்சலத்திற்கு வழங்கும் உயரிய கௌரவமாகும் என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

ஈழநாடு
Eelanadu

# எம்.பிகள்மீது குற்றம் நிரூபிக்கப்படின் மூன்று மாதங்களுக்கு இடைநீக்கம்!

## புத்தாண்டில் முதல் அறிவிப்பை வெளியிட்ட சபாநாயகர்

கொழும்பு, ஜன. 10

**பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏதேனும் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டால் அதிகபட்சமாக மூன்று மாதங்களுக்கு இடைநீக்கம் செய்ய முடியும் என சட்டமா அதிபர் தம்மிடம் விளக்கம் அளித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குவது தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டதன் பின்னரே இந்த முடிவுக்கு வந்ததாகவும் சபாநாயகர் அபேவர்தன அறிவித்தார்.

புத்தாண்டின் முதல் பாராளுமன்ற அமர்வு நேற்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. இதன்போது வெளியிட்ட சபாநாயகரின் அறிவிப்புகளிலேயே இவ்வாறு கூறினார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மேலும் சுட்டிக்காட்டியதாவது,

1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற சிறப்புரிமைகள் சட்டத்தின் 66 மற்றும் 67 ஆம் பிரிவுகள், குற்றவியல் நடைமுறையின் பிரிவு 16 (1) மற்றும் நிலையியற் கட்டளைகள் 77(1), 77(2) மற்றும் 77 ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சட்டமா அதிபர் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

சட்டமா அதிபரின் முடிவின்படி எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஏதேனும் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டால் அவர் ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள் வரை இடைநீக்கம் செய்யப்படலாம்" என சபாநாயகர் அறிவித்தார்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, சபாநாயகருக்கு ஆலோசனை வழங்க சட்டமா அதிபருக்கு உரிமை இல்லை. அத்துடன், இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹண பண்டார மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோரின் நடத்தை தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகள் ஏன் சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் இதே கேள்வியை எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், "சபாநாயகருக்கு ஆலோசனைகளை வழங்கவும் முடிவுகளை எடுக்கவும் சட்டமா அதிபருக்கு உரிமை உள்ளது. சபாநாயகரின் உரிமைகளுக்கு தயவு செய்து மதியுங்கள்."-என்றார். (அ)



# கறுப்பு உடையில் எதிர்க்கட்சியினர்!

கொழும்பு, ஜன. 10

வற் வரித் திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கறுப்பு நிற ஆடை அணிந்து நேற்றைய பாராளுமன்ற அமர்வில் பங்கேற்றனர்.

இந்த வருடத்திற்கான முதலாவது பாராளுமன்ற கூட்டத் தொடர் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமானது.

இந்த நிலையில், அரசாங்கத்தின் முறையற்ற வரிக் கொள்கை காரணமாக, நாட்டு மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (அ)

# கஜகஸ்தானில் இலங்கை தூதரகம்!

கொழும்பு, ஜன. 10

கஜகஸ்தான் மற்றும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகளை மேலும் விருத்தி செய்யும் நோக்கில் கஜகஸ்தான் அஸ்தானாவில் இலங்கைக்கான தூதரகமொன்றை அமைப்பது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள இலங்கைக்கான தூதரகமொன்றை கஜகஸ்தான் அஸ்தானாவில் அமைப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில், ஆசியாவின் இடைத்தொடர்பு மற்றும் நம்பிக்கைகயைக் கட்டியெழுப்பும் படிமுறைகள் தொடர்பான மாநாட்டு செயலகம் கசகஸ்தானில் அமைந்துள்ளமையும், இலங்கையானது குறித்த மாநாட்டின் உறுப்பு நாடாக இருப்பதாலும், மத்திய ஆசிய வலயத்துடன் இணைந்து கொள்வதற்கு இலங்கைக்கு சிறந்ததொரு வாய்ப்பும் உருவாகியுள்ளது.

அத்துடன், கஜகஸ்தானிலிருந்து இலங்கைக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து வருகின்றமையால், இலங்கைக்கான தூதரகமொன்றை அஸ்தானாவில் அமைப்பதற்கும், இரு நாடுகளுக்கிடையில் சுற்றுலாத்துறை மற்றும் கலாச்சார ஒத்துழைப்புக்களை மேலும் விருத்தி செய்து கொள்வதற்காக ஏதுவாகவும் அமையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



# யாழ். வந்த கனேடிய தூதுவர்

யாழ்ப்பாணம், ஜன. 10

இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ், தலைமையிலான மூவர் அடங்கிய குழுவினர்கள் நேற்று யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இக்குழுவினர் தனிப்பட்ட விஜயமாக யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு வருகை தந்ததுடன் பொது நூலகத்தின் தற்போதைய நிலைகள், வாசகர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும், மாணவர்களின் கல்வி கற்றல் நடவடிக்கை தொடர்பாகவும் யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனுடன் விரிவாக கலந்துரையாடினர்.

இதில் யாழ்ப்பாணம் பொது நூலகர் அனுசுயா சிவகுமார், தூதரக அதிகாரிகள், பொதுநூலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# மதங்களுக்கு இடையே ஒற்றுமையை சீர்குலைக்கும் செயல்பாடுகள் தீவிரம்!

## வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 10

நாட்டில் இன, நல்லிணக்கத்தை கட்டியெழுப்பப்படும் சூழ்நிலையில், மதங்களிடையே ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக, வழிபாட்டு தலங்களுக்கான அன்பளிப்புகளை வழங்கும் போதே ஆளுநர் இதனை கூறினார்.

வடக்கு மாகாண ஆளுநரின் ஒதுக்கீட்டின் கீழ் மத வழிபாட்டு தலங்களுக்கான அன்பளிப்புகளை கையளிக்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது யாழ்.நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் கோவில், ஆவரங்கால் சிவன் கோவில், யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை, இளவாலை புனித பிலிப்புநேரியார் தேவாலயம் ஆகியவற்றுக்கான அன்பளிப்புப் பொருட்கள் ஆளுநரால் வழங்கப்பட்டன.

அன்பளிப்பு பொருட்களை வழங்கிய ஆளுநர், வருகை தந்த மத குருமார்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

மதங்களிடையே பூசல் உருவாக இடமளிக்கக்கூடாது எனவும், பொருளாதாரத்தை கட்டியெழுப்ப மத ஒற்றுமை அவசியம் எனவும் அவர் கூறினார்.

ஆளுநரின் கருத்துக்களை கேட்டறிந்த மத குருமார், மத ஒற்றுமை மற்றும் இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை கட்டியெழுப்ப ஆளுநர் முன்னேடுக்கும் செயற்பாடுகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். (அ)

# செங்கடலின் பாதுகாப்புக்கு ஏற்படும் ஆபத்து இலங்கையையும் பாதிக்கும்

கொழும்பு, ஜன. 10

ஹூதி கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகள் மூலம் செங்கடலின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் உலகளாவிய பொருளாதார பெரும் நெருக்கடியை சந்திக்கும் என்பதுடன், இலங்கையும் அதன் தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடும். குறிப்பாக பொருட்களின் விலை பாரிய அளவில் உயரும் என்பதாலேயே ஜனாதிபதி செங்கடலின் பாதுகாப்புக்கு கடற்படையின் கப்பல் ஒன்றை அனுப்ப நடவடிக்கையெடுத்துள்ளதாக பாதுபாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றைய பாராளுமன்ற அமர்வில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போது, நாட்டில் கல்வி மற்றும் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு செலவழிக்க வேண்டிய ரூ. 25 கோடியை ஹூதி கிளர்ச்சியாளர்களை கட்டுப்படுத்த கப்பலை அனுப்ப அரசாங்கம் செலவழிக்கிறது. இதனால் எமக்கு ஏற்படும் நன்மை என்னவென கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்தபோதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (அ)

# ஜப்பான் நிதியமைச்சர் இலங்கைக்கு வருகிறார்

கொழும்பு, ஜன. 10

ஜப்பானின் நிதியமைச்சர் சுசுகி ஷூனிச்சி எதிர்வரும் 11 ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ஜப்பானிய நிதியமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜப்பான் நிதி அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் பாராளுமன்றம், ஜயவர்தன மையம், ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலை, கொழும்பு கப்பல்துறை மற்றும் லங்கா நிப்பொன் பிஸ்டெக் நிறுவனம் ஆகிய இடங்களுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# லியனகே நிதானமான ஆட்டம்; இலங்கை அணி த்ரில் வெற்றி!



கொழும்பு, ஜன. 10

லியனகேவின் பொறுப்பான துடுப்பாட்டமும் தீக்ஷனவின் அபாரமான பந்துவீச்சும் இலங்கை அணிக்கு த்ரில் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

சிம்பாப்வே அணி இலங்கை வந்து ஒருநாள் போட்டி தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டி மழையால் கைவிடப்பட்ட நிலையில் இரண்டாவது போட்டி கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி 44.4 ஓவர்களில் 208 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதில், அந்த அணியின் தலைவர் எர்வின் 82 ஓட்டங்களையும், தொடக்க வீரர் கும்பீ 30, ரியான் புர்ல் 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் மஹீஸ் தீக்ஷன 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

209 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இலங்கை விரட்டியது. அந்த அணி தொடக்கம் முதலே சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. 90 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறியது இலங்கை.

ஜனித் லியனகே ஒரு முனையில் நிதானமாக துடுப்பெடுத்தாடினார். அவர் 127 பந்துகளில் 95 ஓட்டங்கள் எடுத்தார். இருந்தும் 43ஆவது ஓவரில் அவர் ஆட்டமிழந்தார்.

பின்னர் துஷ்மந்த மற்றும் ஜெப்ரி இணைந்து இலங்கை அணிக்கு தேவைப்பட்ட வெற்றிக்கான ஓட்டங்களை எடுத்தனர்.

49 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 211 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது இலங்கை.

இந்தப் போட்டியில் வெற்றிக்கு அருகே சென்ற சிம்பாப்வே அணி அதனை எட்ட முடியாமல் போனது.

(ஐ)

# டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஹென்ரிச் கிளாசன் ஓய்வு



கேப்டவுன், ஜன. 10

தென்னாபிரிக்கா அணியின் நட்சத்திர வீரர் ஹென்ரிச் கிளாசன் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா அணியின் விக்கெட் காப்பாளரான ஹென்ரிச் கிளாசன் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமானார். என்றாலும், 2019 - 2023இற்கு இடையில் நான்கு டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார். இதனைத் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு முடிவை அறிவித்துள்ளார்.

ஓய்வு முடிவு குறித்து பேசியுள்ள கிளாசன்,

"நான் சரியான முடிவைத்தான் எடுக்கிறேனா என்று பல இரவுகள் தூங்காமல் யோசித்தேன். ஏனென்றால், கிரிக்கெட் விளையாட்டில் எனக்கு மிகவும் பிடித்த வடிவம் டெஸ்ட் கிரிக்கெட். ஆடுகளத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நான் சந்தித்த இன்னல்கள் இன்று என்னை ஒரு கிரிக்கெட் வீரராக ஆக்கியுள்ளது. இது ஒரு சிறந்த பயணம். இதில் எனது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

டெஸ்ட் தொப்பியே இதுவரை எனக்கு வழங்கப்பட்டதில் மிகவும் விலையுயர்ந்த தொப்பி. டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வில் என்னை வடிவமைத்த அனைவருக்கும் நன்றி. ஆனால், இப்போதைக்கு ஒரு புதிய சவால் காத்திருக்கிறது. நான் அதனை எதிர்நோக்கியுள்ளேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

இருபது - 20 போட்டிகளில் 172.71 மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டில் 140.66 என ஸ்ட்ரைக் ரேட் கொண்டிருக்கும் கிளாசனுக்கு 2023 சிறந்த ஆண்டாக அமைந்தது. இந்த இரண்டு வடிவங்களிலும் கவனம் செலுத்தும்பொருட்டு தற்போது டெஸ்ட் போட்டிகளில் ஓய்வை அறிவித்துள்ளார் 32 வயதான ஹென்ரிச் கிளாசன்.

(ஐ)

# அடிலெய்ட் ரென்னிஸ் கிரெஜ்சிகோவா தோல்வி

அடிலெய்ட், ஜன. 10

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் அடிலெய்ட் சர்வதேச ரென்னிஸ் போட்டியில், தரவரிசை பெற்ற 2 பிரதான வீராங்கனைகளான பார்பரா கிரெஜ்சிகோவா, பீட்ரிஸ் ஹட்டாட் மாயா ஆகியோர் முதல் சுற்றிலேயே தோல்வி கண்டனர்.


மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில், போட்டித் தரவரிசையில் 4ஆம் இடத்திலிருந்த செக் குடியரசின் பார்பரா கிரெஜ்சிகோவா 5-7, 6-3, 5-7 என்ற செற்களில் ரஷ்யாவின் அனா கலின்ஸ்கயாவிடம் தோல்வி கண்டார்.

5ஆம் இடத்திலிருந்த பிரேஸிலின் பீட்ரிஸ் ஹட்டாட் மாயா 3-6, 4-6 என்ற செற்களில் ரஷ்யாவின் அனஸ்தாசியா பாவ்லியுசென்கோவாவிடம் வீழ்ந்தார்.

(ஐ)



# ஜேர்மனி உதைபந்தாட்ட நாயகன் பிரான்ஸ் மறைவு



பெர்லின், ஜன. 10

ஜேர்மனி உதைபந்தாட்ட அணியின் பிரபல முன்னாள் வீரரான பிரான்ஸ் பெக்கன்பேவர் காலமானார். அவருக்கு வயது 78. இவர் தலைமையிலான ஜேர்மனி அணி கடந்த 1974இல் உலகக் கிண்ணத் தொடரில் சம்பியன் பட்டம் வென்றிருந்தது. யூரோ கிண்ணம் மற்றும் பலன் டி ஓர் விருதையும் இவர் வென்றுள்ளார்.

1990இல் உலகக் கிண்ணம் வென்ற ஜேர்மனி அணியின் பயிற்சியாளரும் இவர்தான். அவரது மறைவுக்கு உதைபந்தாட்ட வீரர்கள், ரசிகர்கள் என உலகம் முழுவதிலிருந்தும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அவர் ஆஸ்திரியாவில் உள்ள சால்ஸ்பேர்க் நகரில் உயிரிழந்தார்.

மேற்கு ஜேர்மனி அணிக்காக 103 சர்வதேச போட்டிகளில் விளையாடிய இவர், மூன்று முறை உலகக்கிண்ணத் தொடரிலும், இரண்டு முறை யூரோ கிண்ணத் தொடரிலும் பங்கேற்று விளையாடி உள்ளார்.

கழக அளவில் பேயர்ன் முனிச் அணிக்காக அதிகம் விளையாடி உள்ளார். நடுக்கள வீரராக விளையாட தொடங்கி அபார தடுப்பாட்ட வீரராக உருவானவர். மறைந்த பிரேசில் ஜாம்பவான் பீலேவுக்கு எதிராக களத்தில் விளையாடி உள்ளார்.

(ஐ)

# பிரிஸ்பேன் ரென்னிஸ் ரைபைகினா சம்பியன்

பிரிஸ்பேன், ஜன. 09

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் மகளிர் பிரிவில் எலனா ரைபைகினா சம்பியன் பட்டம் வென்றனர்.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் பந்தயமான ஆஸி. ஓப்பனுக்கு தயாராகும் வகையில் பல்வேறு போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக பிரிஸ்பேன் ஓப்பன தொடரின் இறுதி போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் முன்னாள் விம்பிள்டன் சம்பியன் எலனா ரைபைகினாவும் - பெலாரஸின் அர்யனா சபலென்காவும் மோதினர்.

இதில் 6-0, 6-3 என்ற நேர்செற்களில் வென்ற ரைபைகினா சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இது அவர் வெல்லும் 6-ஆவது டபிள்யூ. டி. ஏ.பட்டமாகும்.

அனுபவ வீராங்கனையான சபலென்கா எளிதில் வெல்வார் எனக்கருதப்பட்ட நிலையில், ரைபைகினா முழு ஆதிக்கம் செலுத்தி சபலென்காவின் பட்ட கனவை தகர்த்தார்.

(ஐ)



# பங்களாதேஷின் பொருளாதார வளர்ச்சி! தேர்தலில் பிரதமர் ஹசீனா மீண்டும் வெற்றி!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா ஐந்தாவது முறையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை (07.01.24) மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். ஹசீனாவின் ஆளும் அவாமி லீக் 50 சதவீதத்திற்கும் அதிகமான இடங்களை வென்றுள்ளது.

**ஹசீனா அரசின் சாதனை :**

கடந்த 15 ஆண்டுகளில் திருமதி ஹசீனாவின் மிகப்பெரிய சாதனை பங்களாதேஷ் மக்களின் மனதில் அவர் ஏற்படுத்திய நம்பிக்கை தான். இவர் பங்களாதேஷின் உருவாக்க சிற்பியும் முதல் அதிபருமான சேக் முஜிபுர் ரகுமானின் மூத்த மகளுமாவார்.

திருமதி ஹசீனாவின் கீழ் பங்களாதேஷ் ஒரு மாறுபட்ட வளர்ச்சியை தென்னாசியாவிற்கு காட்டுகிறது. பங்களாதேஷ் முஸ்லீம் பெரும்பான்மை நாடு, ஒரு காலத்தில் உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக இருந்தது, 2009 முதல் அவரது தலைமையின் கீழ் நம்பகமான பொருளாதார வெற்றியை அடைந்துள்ளது.

இப்போது அதன் மாபெரும் அண்டை




**இந்தியாவை விஞ்சி வேகமாக, பொருளாதார ரீதியில் வளர்ந்து வருகிறது பங்களாதேஷ். கடந்த தசாப்தத்தில் அதன் தனிநபர் வருமானம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் 25 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.**





நாடான இந்தியாவை விஞ்சி, தென்னாசியாவில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாகும். கடந்த தசாப்தத்தில் அதன் தனிநபர் வருமானம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் 25 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.

சீனாவிற்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது பெரிய ஆடை உற்பத்தியாளராக பங்களாதேஷ் உள்ளது. ஆனால் கோவிட் தொற்றுநோய் மற்றும் உலகளாவிய பொருளாதார மந்தநிலையைத் தொடர்ந்து 2022 நடுப்பகுதியில் பொருளாதாரம் கொந்தளிப்பில் சுழன்றது. அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் ஐஎம்எவ் கடனுக்கான நிபந்தனைகள் முன்பு தள்ளப்படுவதால், அரசாங்கம் பொது வீழ்ச்சியைச் சமாளிக்க போராடியதும் உண்மையே.

ஆனால் ஹசீனாவின் ஆதரவாளர்கள் அவர் வங்காளதேசத்திற்கு மிகவும் தேவையான அரசியல் ஸ்திரத்தன்மையை வழங்கியுள்ளார் என்று வலியுறுத்துகின்றனர்.

இந்த அரசியல் ஸ்திரத்தன்மையை வழங்கிய ஜனநாயக செயல்முறையை நாங்கள் தொடர்ந்துள்ளோம். அதற்காக ஷேக் ஹசீனாவை உலகம் பாராட்ட வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

**வறுமை சூழ்ந்த நாட்டின் வளர்ச்சி:**

ஒரு காலத்தில் மிக வறுமையால் சூழப்பட்டிருந்த ஒரு நாட்டில் கடுமையான பொருளாதார வளர்ச்சிக்கு அவர் தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அவரது அரசாங்கம் பரவலான மனித உரிமை மீறல்கள் மற்றும் இரக்கமற்ற எதிர்க்கட்சி ஒடுக்குமுறை போன்ற குற்றச்சாட்டும் நிலவுகிறது.

இத்தேர்தலில் பிரதமர் ஷேக் ஹசீனா கட்சி போட்டியிட்ட இடங்களில் முழுமையான போட்டியாளர்களை எதிர்கொள்ளவில்லை என்றே கூறப்படுகிறது. எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி, இந்த தேர்தல் ஒரு போலி தேர்தல் என்று முன்பு குற்றம்சாட்டியது குறிப்பிடத்தக்கது. தற்போது சர்ச்சைக்குரிய தேர்தலில் பிரதமர் ஷேக் ஹசீனா மீண்டும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவாமி லீக் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் போட்டியிட்ட 300 நாடாளுமன்றத் தொகுதிகளில் குறைந்தது 152 இடங்களை வென்றதன் மூலம் திருமதி ஹசீனா இன்னும் ஐந்து ஆண்டுகள் பதவியில் இருப்பார்.





**பிரதமர் ஷேக் ஹசீனா வெற்றி:**

12-வது நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 350 நாடாளுமன்றத் தொகுதிகளில், 50 தொகுதிகளுக்கு அரசால் பெண்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதால் மீதமுள்ள 300 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. 90 பெண்கள், 79 சிறுபான்மையினர் உள்பட 1,970 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தலை ஒரு போலியான தேர்தல் என்று குற்றம் சாட்டி, பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி இந்தத் தேர்தலைப் புறக்கணித்தது.

இதேவேளை சுயேச்சைகள் 45 இடங்களிலும், ஜாதியா கட்சி 8 இடங்களிலும் வெற்றி பெற்றன. திங்கட்கிழமையின் பின்னர் முடிவுகள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

76 வயதான ஹசீனா, பொதுமக்கள் ஜனநாயக செயல்பாட்டில் நம்பிக்கை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இவர் 1996ல் முதன்முதலாக பிரதமரானார். 2009ல் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹசீனாவுக்கு இது ஐந்தாவது முறையாகும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற எதிர்ப்புப் பிரச்சாரத்தின் போது பிஎன்பி கட்சியினர், தீவைப்பு மற்றும் நாசவேலையில் ஈடுபட்டதாக பிரதமர் ஹசீனா குற்றம் சாட்டினார். அதன்பின் போலீசாருடன் ஏற்பட்ட மோதலில் பலர் கொல்லப்பட்

(16ம் பக்கம் பார்க்க)

# தமிழரசு கட்சிக்குள் தேர்தல்:

## தமிழ் கட்சிகளும் உட்கட்சி ஜனநாயகமும்!

நிலாந்தன்




தமிழரசு கட்சியின் தலைவரைத் தீர்மானிப்பதற்கான தேர்தல் பெரும்பாலும் இம்மாத இறுதியில் நடக்கலாம் என்றே தோன்றுகிறது. அதை ஒத்தி வைப்பதற்கு சம்பந்தர் முயற்சிப்பதாக இடையில் தகவல்கள் வந்தன. ஆனால் தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் இரண்டு பிரதான வேட்பாளர்களும் தீர்மானகரமாக இருப்பதாகத் தெரிகிறது. குறிப்பாக சுமந்திரன் தேர்தலை நடத்த வேண்டும் என்ற விடயத்தில் பிடிவாதமாக காணப்படுகிறார். பல மாதங்களுக்கு முன்னரே அவர் அதை நோக்கி உழைக்கத் தொடங்கி விட்டார். சம்பந்தருக்கு எதிராக வெளிப்படையாக ஒரு தென்னிலங்கை ஊடகத்துக்கு அவர் கருத்துத் தெரிவிக்கும் பொழுது, அந்தக் கலகம் தொடங்கிவிட்டது. அந்த கலகத்தின் விளைவாகத்தான் தமிழரசுக் கட்சி அதன் தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்தும் ஒரு நிலைமை தோன்றியது.

இது ஒரு விதத்தில் ஜனநாயகமானது. ஒரு கட்சிக்குள் யார் தலைவர் என்பதை தீர்மானிப்பதற்கு தேர்தலை வைப்பது. தமிழரசு கட்சிக்கு 73 வயது. இந்த 73 ஆண்டுகால பகுதியிலும் அதன் தலைமையை தீர்மானிப்பதற்கு தேர்தல் நடக்கவில்லை.அதை ஒரு செழிப்பான பாரம்பரியமாக அவர்கள் சிலாகித்துக் கூறுவது உண்டு.ஆனால் அந்த பாரம்பரியம் இப்பொழுது சிதைந்து விட்டது. அதை சிதைத்தவர் முதலாவதாக சம்பந்தர். இரண்டாவதாக மாவை. மூன்றாவதாக சுமந்திரன். நாலாவதாக கட்சிக்குள் உள்ள எல்லா மூத்த உறுப்பினர்களும். கட்சியின் செழிப்பான ஒரு பாரம்பரியத்தை எல்லாருமாகச் சேர்ந்து சிதைத்து விட்டார்கள். ஆனாலும் தேர்தலை வைத்து தலைவரைத் தேர்வு செய்வது என்பது அதைவிடச் செழிப்பான ஒன்றுதான். அது ஜனநாயகமானது.

அதே சமயம், கட்சியின் தலைவருக்கான தேர்தலில் எத்தனை பேர் வாக்களிக்க போகிறார்கள் என்ற கேள்விக்கு கட்சியின் மூத்த ஆட்களிடமே தெளிவான பதில் இல்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அண்மையில் டான் டிவிக்கு வழங்கிய ஒரு நேர்காணலில் தென்மராட்சியைச் சேர்ந்தவரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான சயந்தன் பேசும்பொழுது, எத்தனை உறுப்பினர்கள் வாக்களிக்க போகிறார்கள் என்று கூறுவதைத் தவிர்த்தார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அவர் மட்டுமல்ல போட்டியில் ஈடுபடும் பிரதான வேட்பாளர்களுக்கும் கூட கட்சிக்குள் எத்தனை பேர் வாக்களிக்கப் போகிறார்கள் என்பது சரியாகத் தெரியவில்லை என்ற ஓர் அவதானிப்பும் உண்டு. இது கட்சிக் கட்டமைப்பு சீரழிந்து போய் இருப்பதனை கட்சியின் யாப்பு விசுவாசமாக பின்பற்றப்படவில்லை என்பதனைக் காட்டுகின்றது. அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் கூறுவது போல தமிழ் மக்கள் மத்தியில் கட்சிகள் இல்லை தேர்தலில் ஈடுபடும் குழுக்கள்தான் உண்டு என்பதை இது காட்டுகின்றதா?



எனினும் நடக்கவிருக்கும் தேர்தலையொட்டி எல்லாம் சீர்செய்யப்படக்கூடிய நிலைமைகள் தெரிகின்றன. அதுவும் நல்லதுதான். தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ளதில் பெரிய கட்சி அது. அதற்குள்ளேயே இதுதான் நிலைமை என்றால், ஏனைய கட்சிகளின் நிலைமை எவ்வாறு உள்ளது?

தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்குள் நிலைமை அதைவிட மோசம். அங்கேயும் குறிப்பிட்ட சிலரின் ஆதிக்கம்தான் பலமாக உள்ளது. அந்த மிகச் சிலரும் கூட உருகிப் பிணைந்த, பிரிக்கப்படவியலாத ஒரு கூட்டாக இல்லை என்பதைத்தான் மணிவண்ணனின் விவகாரம் உணர்த்தியது. அக்கட்சியும் ஒரு வாரிசு அரசியல் தலைமைத்துவத்தைக் கொண்ட கட்சியாகத்தான் இன்றுவரை காணப்படுகிறது.

ஏனைய கட்சிகளை எடுத்துப் பார்த்தால், விக்னேஸ்வரனின் கட்சிக்குள்ளும் நிலைமை மோசமாகத்தான் உள்ளது. கட்சிக்குள் மிகச் சிலருக்கிடையில் தான் முடிவுகள் எடுக்கப்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது. விக்னேஸ்வரன் என்ன முடிவை எப்பொழுது எடுப்பார் என்பதனை கட்சியின் மூத்த தலைவர்களாலேயே மதிப்பிட முடியாத ஒரு நிலைமை. கட்சி உறுப்பினர்களாக இல்லாத சிலர் விக்னேஸ்வரனின் மீது செல்வாக்கு செலுத்துகிறார்கள் என்று ஏற்கனவே குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. அந்தக் கட்சிக்குள்ளும் முடிவுகள் ஜனநாயகமாக எடுக்கப்படுவதில்லை. விக்னேஸ்வரன் ஒரு தொழில் சார் அரசியல்வாதி அல்ல. எனவே அவரிடம் அதை எதிர்பார்க்கவும் முடியாது.

ஏனைய கட்சிகள் என்று பார்த்தால் பெரும்பாலானவை ஆயுதப் போராட்ட பாரம்பரியத்தில் வந்தவை. அவை ஏற்கனவே தங்களுக்கென்று பலமான கட்டமைப்புகளை கொண்டிருக்கின்றன. ஆனால், எல்லாக் கட்டமைப்புகளும் இருந்தாலும் சிலர்தான் திரும்பத் திரும்ப தலைவர்களாக மேல் எழுதுகிறார்கள். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இற்குள் சுரேஷ் பிரேமச்சந்திரன் தான் தொடர்ச்சியாகத் தலைவராகக் காணப்படுகிறார். டெலோ இயக்கத்தில் செல்வமும்,புளட் இயக்கத்தில் சித்தார்த்தனும் கேள்விக்கிடமற்ற தலைவர்களாகக் காணப்படுகின்றார்கள். எனவே அந்த கட்சிகளுக்குள்ளும் ஜனநாயகச் சூழல் செழிப்பாக உள்ளது என்று கூற முடியாது.

இப்பொழுது கூட்டிக்கழித்துப் பார்த்தால் தமிழ் தேசியப் பரப்பில் உள்ள பெரும்பாலான கட்சிகளுக்குள் உட்கட்சி ஜனநாயகம் மிகப் பலவீனமாகவே காணப்படுகின்றது. தமிழ் மிதவாதிகளும் ஆயுதப் போராட்டத்தை விமர்சிப்பவர்களும் ஆயுத போராட்டத்துக்குள் உட்கட்சி ஜனநாயகம் இருக்கவில்லை என்பதனை ஒரு பெரிய குற்றச்சாட்டாக முன்வைப்பதுண்டு. ஆனால் தமிழ் மிதவாதக் கட்சிகளுக்குள்ளும் அது இருக்கவில்லை என்பதுதான் வரலாற்று உண்மை. அது ஒரு தமிழ் வியாதி. தமிழ் பரம்பரை வியாதி. இனப்படுகொலைக்கு பின்னரும் குணமாக்கப்படாத ஒரு வியாதி.

### தமிழரசுக் கட்சிக்குள் நடக்கவிருக்கும் தேர்தல் அதில் ஏதும் உடைப்பை ஏற்படுத்துமா?

ஒரு கட்சி என்று வரும் பொழுது அதற்குள் பல்வேறு வகைப்பட்ட நம்பிக்கைகளை கொண்டவர்கள் காணப்படுவார்கள். கட்சிகளுக்குள் மட்டுமல்ல தேசிய இயக்கங்கள் எல்லாவற்றுக்கும் அது உண்டு. ஒரு தேசிய இயக்கம் அல்லது தேசியப் பெருங்கட்சி எனப்படுவது, அது பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் கூட்டத்தின் பலங்களையும் பலவீனங்களையும்தான் பிரதிநிதித்துவப்படுத்தும். அந்த அடிப்படையில் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்களிடம் என்ன இருக்கின்றதோ அதைத்தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இந்திய இலங்கை உடன்படிக்கை எழுதப்பட்ட காலத்தில், யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் ஒரு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் பேசிய மு.திருநாவுக்கரசு ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டினார். தமிழ் அரசியலில் செழிப்பான ஒரு ஜனநாயகப் பாரம்பரியம் இருந்ததில்லை என்பதே அது. ஈழத் தமிழர்களின் நவீன வரலாற்றில் ஜனநாயகப் பாரம்பரியத்தைக் கட்டி எழுப்பத் தேவையான நூல்கள் ஆய்வுகள் பெருமளவுக்கு வெளிவந்திருக்கவில்லை என்றும் அவர் அந்த உரையில் குறிப்பிட்டிருந்தார். தமிழ் அரசியலில் மட்டுமல்ல, தமிழ் மக்களின் அன்றாட வாழ்விலும் அதுதான் நிலைமை. தமிழ் வீடுகளில்,பாடசாலைகளில், அலுவலகங்களில், கோவில்களில், சனசமூக நிலையங்களில், பெரும்பாலானவற்றில் அக ஜனநாயகம் இருக்கவில்லை. சமூகத்துக்குள் இருக்கும் ஒன்றைத்தான் கட்சிகளும் இயக்கங்களும் பிரதிபலிக்கும்.

தமிழ்க் கட்சிகள் மத்தியில் அகஜனநாயகம் செழிப்பாக இருக்கவில்லை. இருந்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைந்திருக்காது. கூட்டமைப்பு எனப்படுவது தமிழ் அரசியலில் தோன்றிய ஒரு திருப்பகரமான கூட்டு ஆகும். ஆயுதப் போராட்ட இயக்கம் ஒன்று தான் ஆயுத ரீதியாக தோற்கடித்த அல்லது அரங்கில் இருந்து அகற்றிய இயக்கங்களையும் கட்சிகளையும் மீண்டும் அரவணைத்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பு அது. அதற்குள் ஒரு பண்புருமாற்ற அரசியல் உண்டு. அந்த பண்புருமாற்ற அரசியல் காரணமாகவும், ஆயுதப் போராட்டத்தில் பின்னணியில் நடந்த ஒரு தேர்தல் என்ற அடிப்படையிலும் நவீன தமிழரசியலில் அதிகளவு ஆசனங்களை கூட்டமைப்பு பெற்றது.

இவ்வாறு நவீன ஈழத் தமிழ் அரசியலில் தோன்றிய பண்புரு மாற்றத்தின் குறியீடாக காணப்பட்ட ஒரு கட்டமைப்புச் சிதைத்தமைக்கு சம்பந்தர்தான் முழுப் பொறுப்பு. ஏனெனில் அவருடைய தலைமைப் பொறுப்பின் கீழ்தான் கட்சி சிதைந்தது. இப்பொழுது தனது தேர்தல் தொகுதியில் கிளைக் குழுக்களுக்கு தான் நியமித்த ஆட்களை கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறும் ஒரு பரிதாபகரமான நிலைக்கு அவர் தாழ்ந்து விட்டார். ஒரு பெருந்தலைவர், முது தலைவர் குறிப்பாக கிழக்கில் இருந்து வந்த ஒரு தலைவர், அவருக்குத் தரப்பட்ட கிட்டத்தட்ட இரண்டு தசாப்த கால தலைமைத்துவ காலத்தை எங்கே கொண்டு வந்து விட்டிருக்கிறார்? இப்பொழுதும் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அவர் கையாளும் உத்திகள் வேலை செய்யவில்லை என்றே தெரிகிறது. கட்சியின் மீது அவருடைய பிடி பெருமளவுக்கு தளர்ந்து போய்விட்டது.

தேர்தல் நடக்குமாக இருந்தால், அதற்குரிய கூட்டம் திருமலையில் நடக்கும். திருமலை நகர சபை மண்டபத்தில் அது நடக்கும். அதற்குரிய நிதி வசதிகளை புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளிடமிருந்து கட்சி பெற்றதாக ஒரு தகவல். அதாவது கட்சியின் பிரதான கூட்டங்களை நடத்துவதற்குக்கூட கட்சியிடம் சேமிப்பில் பணம் இல்லையா?

வரும் பத்தாம் திகதி கட்சியின் அரசியற் குழு சம்பந்தரின் வீட்டில் கூடுகின்றது. அதில் தேர்தல் பற்றி இறுதி முடிவெடுக்கப்படலாம்.தேர்தல் நடந்தால், யார் வென்றாலும் அவருக்கு சவாலாக ஓர் எதிரணி இருக்கும். அது அவருடைய முடிவுகளை கேள்விக்கு உட்படுத்திக் கொண்டே இருக்கும். அதுகூட உட்கட்சி ஜனநாயகத்தை வளர்க்கும். இந்தத் தலைமைப் போட்டி காரணமாக கட்சியின் உட்கட்சி ஜனநாயகம் செழிப்படையுமாக இருந்தால், அது தமிழ் அரசியலில் வரவேற்கத்தக்க ஒரு முன்னேற்றம் தான். (ஆதவன் நியூஸ்)

# நிலவும் சீரற்ற காலநிலையால் 2546 பேர் பாதிப்பு; ஒருவர் பலி!

கொழும்பு, ஜன. 10

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் 749 குடும்பங்களை சேர்ந்த 2546 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் அறிக்கை வெளியிட்டுள்ளது .

இதேவேளை தொடர் மழையினால் நீர் நிலைகள் நிரம்பி வழிவதுடன் தாழ்நிலப்பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளது.

அதனடிப்படையில், பதுளை மாவட்டத்தில் 575 குடும்பங்களைச்சேர்ந்த 1918  பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 1064 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் 75 குடும்பங்களை சேர்ந்த 290 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 46 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. 58 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 26 குடும்பங்களை சேர்ந்த 95 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 25 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கேகாலை மாவட்டத்தில் 15 குடும்பங்களை சேர்ந்த 52 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 15 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 33 குடும்பங்களை சேர்ந்த 103 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 33 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 25 குடும்பங்களை சேர்ந்த 88 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 11 வீடுகள் பகுதியளவிலும் 2 வீடுகள் முழுமையாகவும்
சேதமடைந்துள்ளதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# பங்களாதேஷின் பொருளாதார வளர்ச்சி!...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

டதாகவும் கூறப்படுகிறது. மேலும் அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் உள்ளிட்ட செயல்களில் ஈடுபடுவதாக சொல்லப்பட்டாலும், அந்த குற்றச்சாட்டுகளை அவர்கள் நிராகரிக்கிறது வருகின்றனர்.

கடந்த 2022ல் உணவுச் செலவுகள் மற்றும் பல மாதங்களாக நீடித்த இருட்டடிப்புகளுக்குப் பிறகு, பொருளாதாரத் தலையீடுகள் ஹசீனாவின் அரசாங்கத்தின் மீது பலரை அதிருப்தி அடையச் செய்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது

**மனித உரிமை மீறல்:**

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு மதிப்பீட்டின்படி, 2023 அக்டோபர் 28 அன்று ஒரு எதிர்க்கட்சியின் பேரணி வன்முறையாக மாறிய பின்னர் கிட்டத்தட்ட 10,000 செயல்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டனர். இதன் விளைவாக குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 5,500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆளும் அவாமி லீக்கின் அரசியல் எதிரிகளால் சிறைகளை நிரப்புவதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த குற்றச்சாட்டுகளை அவாமி லீக் பின்னர் மறுத்துள்ளது.

தற்போது அவாமி லீக்கின் இந்த புதிய வெற்றி, நடைமுறையில் ஒரு கட்சி ஆட்சிக்கு வழிவகுக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளது. ஆளும் அரசாங்கம் தனது அடக்குமுறையைத் தளர்த்தும் என்று வெகு சிலரே எதிர்பார்க்கின்றனர். மேலும், எதிர்க்கட்சிகளும் சிவில் சமூகக் குழுக்களும் அரசாங்கத்தின் சட்டபூர்வமான தன்மை குறித்து தொடர்ந்து கேள்விகளை எழுப்பிகின்றனர்.

**திருமதி ஜியா வீட்டுக் காவலில்:**

திருமதி ஹசீனாவின் கடும் போட்டியாளரான முன்னாள் பிரதமர் கலிதா ஜியாவின் மகனான திரு ரஹ்மான், தேர்தலுக்கு முன்னதாக பிஎன்பி கட்சியினர் தீவைப்பு தாக்குதல்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டப்பட்டார். திருமதி ஜியா தற்போது ஊழல் குற்றச்சாட்டில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

2004 ஆம் ஆண்டு திருமதி ஹசீனாவுக்காக ஒரு பிரச்சார பேரணியில் கையெறி குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதற்காக 2018 ஆம் ஆண்டில் திரு ரஹ்மான் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார். அந்த சம்பவத்தில் திருமதி ஹசீனா காயமடைந்தார் மற்றும் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டனர்.

தன் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஆதாரமற்றவை, அரசியல் பழிவாங்கும் நோக்கத்தில் வேரூன்றியவை. மக்கள் வாக்களிக்க வேண்டாம் என்றும் பிஎன்பி அழைப்பு விடுத்தது.

எத்தகைய குற்றச்சாட்டுக்கள் இருப்பினும், பிரதமர் ஹசீனாவின் ஆட்சியில் உள்ள பங்களாதேஷ் வேறொரு மாறுபட்ட தோற்றத்தை வழங்குகிறது. 2009 முதல் அவரது தலைமையின் கீழ் நம்பகமான பொருளாதார வெற்றியை அந்நாடு அடைந்தது. நாட்டின் சொந்த நிதிகள், கடன்கள் மற்றும் மேம்பாட்டு உதவிகளைப் பயன்படுத்தி, ஹசீனாவின் அரசாங்கம் கங்கையின் குறுக்கே 2.9 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான பத்மா பாலம் உட்பட மிகப்பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களை மேற்கொண்டது.

இந்த பாலம் மட்டும் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 1.23 வீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா ஐந்தாவது முறையாக மீண்டும் தேர்தலில் அமோக வெற்றியின் பின்னர் இப்பிராந்திய பொருளாதார வல்லரசுகளான இந்தியாவுடனும் - சீனாவுடனும் சமாந்திரமான உறவை பேணுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

●

